பக்கங்கள் : பன்னிரண்டு + II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 29 புதன்கிழமை (13.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 259

## மோதல்களில் வேண்டுமானால் வெல்லலாம்; ஆனால்

# தமிழரின் ஆதரவு இல்லாததால் போரில் அரசு வெல்ல முடியாது!

### இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் சொல்கிறார்

புதுடில்லி, ஒகஸ்ட் 13



**"இலங்கை அரசுப் படைகள் புலிகளுக்கு எதிரான மோதல்களில் வெற்றி பெறலாம். எனினும், ஈழத் தமிழர்கள் அரசுப் பக்கம் இல்லாததால் அரசினால் யுத்தத்தில் வெற்றி பெற முடியாது."**

**- இப்படி உறுதிபடக் கருத்துக் கூறியிருக்கின்றார் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன்.**

சிங்கப்பூரின் 'த ஸ்ரெயிட் ரைம்ஸ்' என்ற செய்திப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே எம்.கே. நாராயணன் இலங்கையில் கடும் உணர்வலைகளைத் தோற்றுவிக்கக் கூடிய இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

எம்.கே.நாராயணன் தனது இந்த ஆலோசனை குறித்து இலங்கை அரசு மகிழ்ச்சியடையாது என்பது தனக்குத் தெரியுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நீண்ட காலமாக நீடிக்கும் யுத்தம் முடிவிற்கு வர வாய்ப்புண்டா என்பது குறித்த அவரது மதிப்பீட்டினை வழங்குமாறு கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த நாராயணன் - "இலங்கை இராணுவம் கடந்த சில வாரங்களில் பெருமளவு முன்னேற்றத்தைக் கண்டிருக்கலாம். எனினும் அவர்கள் மோதல்களில் வெற்றி பெற்றாலும் கூட யுத்தத்தில் வெல்ல முடியாது" - எனக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் ஆதரவு இலங்கை அரசுக்கு இல்லை எனத் தான் கருதுகின்றார் எனவும் அவர் சொன்னார். (12 ஆம் பக்கம் பார்க்க)

### குமுழமுனையில் ஷெல் வீச்சு; பொது மகன் ஒருவர் பலி!

முல்லைத்தீவு, ஒக.13

படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் குமுழமுனையைசேர்ந்த அப்பாவி பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மூவர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் மணலாற்றில் இருந்து படையினர் குமுழமுனை, செம்மலை பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து தொடர்ச்சியான பல்குழல் மற்றும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இதில் குமுழமுனைப் பிர தேசத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் படுகாயமடைந்துள்ளனர். செம் மலை பகுதியில் ஒருவர் காயமடைந் துள்ளார்.

முல்லைத்தீவு ஏழாம் வட்டாரம் குமுழமுனையை சேர்ந்த தர்மலிங்கம் (வயது - 54) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

## காங்கேசன்துறைக் கடலில் மூழ்கியுள்ள கப்பல்களை அகற்ற இந்தியா உதவுமாம்

புதுடில்லி, ஒக.13

காங்கேசன்துறை துறைமுகத்தில் மூழ்கியுள்ள கப்பல்களை அகற்றுவதற்கு உதவ இந்தியா முன்வந்துள்ளதாக இந்தியப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அரசிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உற வுகள் நெருக்கமடைவதையும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக் கு புதுடில்லியின் ஆதரவையும் இது புலப் படுத்துகின்றது என்று அதில் குறிப்பிட்டுள்ளது.

கட்டுரை 9 ஆம் பக்கத்தில்

இலங்கையுடனான உறவுகளில் அரசியல் வெற்றியைப் பெறுவதற்கு பொருளாதாரத்தைப் பயன்படுத்தும் இந்தியாவின் பல நோக்குடன் கூடிய தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாகவே காங்கேசன்துறை துறைமுக விவகாரம் அமைகின்றது -

காங்கேசன்துறை துறைமுகத்தில் மூழ்கியுள்ள கப்பல்களை அகற்றுவதற்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை

*பிரபல இரசாயனவியல் ஆசிரியர்*

ஏ.லோகநாதன்

(யாழ்.மத்திய கல்லூரி)

தயாரித்து வழங்கும்

மாதிரி இரசாயனவியல் வினாப்பத்திரம்

உள்ளே I + II ஆம் பக்கங்களில்

## புலிகளின் தலைநகரம் கிளிநொச்சி இன்னும் நான்கு மாதங்களில் படையினர் வசமாகிவிடும்

### பாதுகாப்பு செயலர் கோத்தபாய ஆரூடம்



லண்டன், ஒக. 13

விடுதலைப்புலிகளின் தலைநகரான கிளிநொச்சியை அடுத்த நான்கு மாதங்களில் படையினர் முற்றாக தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விடுவார்கள் என்று நம்புகிறேன்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இப்படிக் கூறியுள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு கருத்துத்தெரிவித்தபோதே இவ்வாறு சொன்னார்.

'டைம்ஸ்' பத்திரிகைக்கு அவர்மேலும் கூறியதாவது:

விடுதலைப்புலிகளின் முக்கிய நகரம் கிளிநொச்சி. அந்த நகரத்தை அடுத்த நான்கு மாதங்களில் கைப்பற்றுவதே படை யினரின் இலக்காகும்.

இந்த வருட இறுதியில் அந்த நகரை படையினர் தம்வசம் கொண்டுவருவது சாத்தியமாகும்.

இந்த வருட இறுதிக்குள் - எதிர்வரும் நான்கு மாதங்களில் - கிளிநொச்சியை முற்றாக கைப்பற் றுவதென்ற இலக்கை வைத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா முன்னரங்கில் கடும் மோதல் 12 படையினர் பலி; புலிகள் அறிவிப்பு

கொழும்பு, ஒக.13

வவுனியா, முன்னரங்க நிலைகளான நவ்வி மற்றும் குஞ்சுக்குளம் பகுதிகளில் தமிழீழ விடு தலைப் புலிகளுக்கும் அரசு படைகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் தொடக்கம் நேற்று வரை இடம் பெற்ற கடும் சமரில் படைத்தரப்பைச் சேர்ந்த 12 பேர் கொல்லப்பட்டனர்; 18 பேர் வரை படு காயமடைந்தனர் என்று புலிகள் தரப்பில் நேற்று அறிவிக்கப் பட்டது.

இச்சமர் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.50 மணிமுதல் நேற்றுப் பிற்பகல் 2 மணிவரை நீடித்திருக்கின்றது.

நவ்வி மற்றும் குஞ்சுக்குளம் பகுதி ஊடாக நேற்றுமுன்தினம் முற்பகல் 10.50 மணியளவில் பெருமளவிலான பின்புலச் சூட்டாதரவுகளுடன் படைத் தரப்பினர் முன்னேற முயன்றனர் என்றும் - அதற்கு தாங்கள் மேற்கொண்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

### மேர்வின் சில்வாவுக்கு எதிராக இரத்தினபுரியிலும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக. 13

அமைச்சர் மேர்வின் சில்வாவின் அடாவடித்தனத்தைக் கண்டித்து இரத்தினபுரியிலும் நேற்றுக்காலை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஐக்கிய சோசலிசக்கட்சி மற்றும் ஐக்கிய முற்போக்கு ஊழியர் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தொழிற்சங்க அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு மேர்வினுக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

'சிரச' ஊடகவியலாளர்கள் மீது தாக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதத்தைக் கைவிட்டு வெள்ளைக் கொடியுடன் மஹிந்தவிடம் பிரபாகரன் சரணடைய வேண்டுமாம்!

### ஆசைப்படுகிறார் கெஹலிய; அதுவரை போர் தொடரும் என்றும் கூளுரை



கொழும்பு, ஒக.13

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சரணடையும் வரை தற்போதைய யுத்தம் நிறுத்தப்படவோ அல்லது அமைதிப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவோ மாட்டாது என்று அமைச்சரும், அரச பாதுகாப்புப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சீனா சென்ற ஜனாதிபதி இந்தச் செய்தியை உலக நாடுகளுக்கு உறுதியாகத் தெரிவித்து விட்டுதான் நாடு திரும்பினார் என்றும் கெஹலிய சொன்னார்.



கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றி (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வங்கிக் கணக்குகள் கைவிடப்பட்டவையாக கருதப்படாமலிருக்க உடன் செயற்படுங்கள்

## வாடிக்கையாளருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக. 13

வர்த்தக வங்கிகளில் இடப்பட்ட வைப்புக் கணக்குகள் பத்து வருட காலத்துக்கு மேலாக எதுவித செயற்பாடுகளும் இன்றிக் காணப் படுமாயின் அவை கைவிடப்பட்ட சொத்துக்களாகக் கருதப்படும்.

அதனைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் வாடிக்கையாளர் கள் தமது கணக்குகள் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட வங்கிகளுடன் தொடர்பு கொள்வது அவசியம் என்று வங்கி வட்டாரங்கள் உதய னுக்குத் தெரிவித்தன.

கைவிடப்பட்ட சொத்தாகக் கருதப்படுவதைத் தவிர்க்கும் நடைமுறைகள் குறித்து மக்களுக்கு இது குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பொருட்டு - அவர்களின் நன்மை கருதி - இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளை செய்திக் குறிப்பு ஒன்றை வெளி யிட்டுள்ளது.

அதன் விவரத்தை மக்களின் - வங்கிகளின் வாடிக்கையாளர் களின் நன்மை கருதி இங்கு தருகிறோம்:

இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தலுக்கேற்ப அனுமதி பெற்ற எல்லா வணிக வங்கிகளும், வங்கியியல் சட்டத்தின் பிரிவு 72 மற்றும் 73க்கு அமைய 31.12.2007ல் உள்ளவாறு வங்கியிலிருக்கும் கைவிடப் பட்ட சொத்துக்கள் பற்றி வருடந்தோறும் மத்திய வங்கிக்கு அறிவிக்கவேண்டும்.

பின்வரும் 'அ', 'ஆ' பகுதிகளில் குறித் துரைக்கப்பட்டவாறு கைவிடப்பட்ட சொத் துக்களை இனங்காணல் வேண்டும். அதா வது பத்து வருடங்களுக்கு மேலாக எதுவித செயற்பாடுகளும் இன்றி காணப்படுமா னால் அவை கைவிடப்பட்ட சொத்துக்கள் என அழைக்கப்படும்.

செயற்பாடுகள் என இங்கு அழைக்கப் படும் சொற்பதம், வாடிக்கையாளரின் கணக்காக இருப்பின் வைப்பினை மேற் கொள்ளல், மீளப்பெறுதல், அல்லது முக வரி மாற்றம் பற்றி அறியத்தருதல், வைப்பு புத்தகத்தை சமர்ப்பித்து பதிவுகளை உரிய படி முறைப்படுதல் அல்லது எழுத்து மூலத்தொடர்பினைப் பேணுதல், பாது காப்பு பெட்டங்களைப் பொறுத்தவரை அதற்கான வாடகைக் கொடுப்பனவி னைச் செலுத்தல் ஆகிய ஏதாவது ஒரு நட வடிக்கையை சொந்தக்காரர் மேற்கொள் வதைக் குறிக்கும்.

அ) எல்லா வகையான வைப்புக் கணக் குகள் அதாவது நடைமுறைக்கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், நிரந்தர வைப்புக் கள்(சாதாரண வைப்புக்கள் அல்லது ஏதா வது விசேட திட்டத்திற்குட்பட்ட கணக் குகள் முதலானவை.)

ஆ) வாடகை செலுத்தவேண்டிய காலம் முடிவடைந்து பாதுகாப்பு பெட்டகங்கள் அல் லது பெட்டிகளில் உள்ளடக்கப்பட்டிருப்பவை.

வாடிக்கையாளர்கள் ஏற்கனவே இறுதி யாக அறிவித்த முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந் தும் குறிப்பிட்ட வாடிக்கையாளரிடமி ருந்து மூன்று வருடங்களுக்குள் எதுவித பதிலும் கிடைக்கப்பெறாதவை - என்று விவரிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள், இது சம்பந்தமாத் தாம் விளக்கம்பெற விரும்பினால் தமது சந்தேகங்களையும் விளக் கங்களையும் BOC agmnp@hot mail.com என்ற மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள் ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (அ)


## யாழ்.மாவட்ட ஊழியர்களின் ஐக்கியம்

### விஷேசித்த ஊழியர் கருத்தரங்கு


போதகர் டேவிட் பெர்ணான்டஸ் (ஆஸ்திரேலியா) அவர் கள் மீண்டும் யாழ். வருகை. அவர்களின் விஷேசித்த ஊழியர் கருத்தரங்கு நடைபெறும் என்பதையும் எனவே சகல ஒன்றிய அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்: அசெம்பிளி ஒப் கோட்சபை, யாழ்ப்பாணம்.
காலம்: 16.08.2008 சனிக்கிழமை
நேரம்: காலை 8.30 மணிமுதல்
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொலைபேசி: 0212225501 நிர்வாகம்.


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

திருமதி இராசம்மா துரைசிங்கம்
(இராசலட்சுமி)



அன்னை மடியில்
12.04.1937
ஆண்டவன் அடியில்
24.07.2008

24.07.2008 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது அன்புத் தெய்வத் தின் மறைவுச் செய்தி கேட்டு, நேரிலும் தொலைபேசியூடாகவும் அனுதா பம் தெரிவித்தவர்களுக்கும், ஆறுதல் அளித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் ஏனையோ ருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (13.08.2008) புதன்கிழமை காலை எமது இல் லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 16.08.2008 சனிக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத் தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் ஆத்மசாந்திப் பூஜையிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்:*
*எஸ்.துரைசிங்கம் (கணவர்),*
*இல.55-5/2, 37ஆவது ஒழுங்கை,*
*வெள்ளவத்தை. தொ.பே.011-2362921.*

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(77191)


## சுனாமி வீடுகள் திறப்பு விழாவும் கையளிப்பும்

14.08.2008

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306,B1இன் நிதியுதவியுடன் வடமராட்சியில் கட்டப்பட்ட வீடுகள் முன்னாள் மாவட்ட ஆளுநர்

**லயன் செ.ராகவன் MJF**

அவர்களால் எதிர்வரும் 14.08.2008 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோலாகலமாக திறந்து கையளிக்கப்படும். மேற்படி நிகழ்வு பருத்தித்துறை சிவன்கோயில் அருகாமையில் உள்ள திக்கமுனை மைதானத்தில் நடைபெறும். சகல லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம். குறுகிய கால அவகாசமான படியினால் தனித்தனி அழைப்புகள் அனுப்பமுடியவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

(த/554130)

வடமராட்சி லயன்ஸ் கழகம், கோப்பாய் லயன்ஸ் கழகம்.


## சுன்னாகம் வங்கியில் பாராட்டுவிழா

இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை மேற்தரக் கிளையாக தரம் உயர்த்தப்பட் டமை காரணமாக, வங்கி ஊழியரின் சேவை யைப் பாராட்டும் விழா இன்று பி.ப 2.30 மணிக்கு வங்கியில் இடம்பெறவுள் ளது.

கிளையின் முகாமையாளர் எஸ்.எஸ்.அரச குமார் தலைமையில் இடம்பெறும் இந்நி கழ்வில் பிரதம விருந்தினராக வட பிராந் திய உதவிப்பொதுமுகாமையாளர் பி.ஏ.அரு மைநாயகமும் சிறப்பு விருந்தினராக வடமா காண செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவ ரட்ணமும், கௌரவ விருந்தினராக கலாபூ சணம் கெங்காதரன் ஆச்சாரியாரும் கலந்து கொள் வர். (1)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்.லயன்ஸ் கழக அனுசரணையுடன் நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக் கிடை யில் நடத்தப்பட்ட இறுதி முன்னோடிப் பரீட்சையில் மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 350 மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று பி.ப 2 மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை யில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட ஆளு நர் லயன் செ.ராகவன், யாழ்.வலயக் கல் விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர்.


### விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் இரண்டு மாதங்கள் நிரம்பிய குட்டிகள் விற்பனைக்குண்டு
தொடர்பு:- இல: 6, சிவப்பிரகாசம் வீதி, (கராஜ்ஜக்கு அண்மையில்) யாழ்ப்பாணம். தொ.பே. 222 9782

### தேவை

கல்பேட், ஊர்ச் சேவல் உடன் தேவை
தாசன் பாம்
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

ராஜா 2 யாழ்ப்பாணம்
60 ஆவது நாளை நோக்கி
20 வரை சகல
வகுப்புகளுக்கும் அரைக் கட்டணம்
கமல்ஹாசன், அசின்
தசாவதாரம்



காட்சிகள் 10.30–2.00


## அதிபர், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

ஆசிரிய நிர்வாக விடயங்கள், நிதிப் பிரமாணங்கள் தொடர்பான விளக்கமும் அவை தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயும் கலந்துரையாடல் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 8.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி யில் இடம்பெறவுள்ளது.

இன்று புதன்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யும் வண்ணை நாவலர் ம.வி.நடைபெறவிருந்த இந்தக் கலந்துரை யாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

## அனலையம்பதி மேவும் அருள்மிகு பூரணை புட்கலாதேவி சமேத அரிஹரபுத்திர ஐயனார் ஆலய மகோற்சவ பெருவிழா



*ஐயன் அடியார்களே!*

*07.08.2008 ஆம் திகதி கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.*

*14.08.2008 ஆம் திகதி வியாழக் கிழமை மாலை சப்பறத் திருவிழாவும்*

*15.08.2008 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவ விழாவும்*

*16.08.2008 ஆம் திகதி சனிக்கிழமை 'காலை தீர்த் தோற்சவ திருவிழாவும்*

*17.08.2008 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திருக் கல்யாண உற்சவமும்*

*நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரும் வருகை தந்து ஐயன் அருட்கடாச்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.*

ஆலய பரிபாலன
சபையினர்.

*(77184)*




(77182)

மேல்மாடிப் பந்தல் விற்பனைக்கு

தொடர்பு:
முருகன்
கோயிலடிவீதி,
நெல்லியடி.
தொ.பே:
0777290536


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சத்தியமூர்த்தி அம்பிகை



பண்ணாகத்தைச் சேர்ந்த சத்தியமூர்த்தி அம்பிகை நேற்று (12.08.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சத் தியமூர்த்தி (சிங்கர் மெசின் விநியோகஸ்தர், பளை) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் அமரர்களான சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெகநாதன், திருவாதவூரர், வைரமுத்து ஆகியோரின் அருமைச் சகோதரியும், அமரர்களான தியாகராசா, சோதிநாதன், கோமளாதேவி மற்றும் கனகநாயகம் (கொழும்பு), தயாபரசிவம், அன்னரத்தினம், வைகுந்தவாசன் (கொழும்பு), திலகவதியார் (கிராம அலுவலர்), வள்ளுவதாசன் (யா/ பல்கலைக் கழக உத்தியோகத்தர்), அன்னரத்தினம், திலகவதி, செல் லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாராதாமணிதேவி (கனடா), ருக்மணிதேவி, நவமணிதேவி (அரசினர் வைத்திய சாலை, பண்டத்தரிப்பு), நடராசமூர்த்தி (பிரான்ஸ்), சத்திய தேவி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரன் (கனடா), துரைராஜா, திருமகள்(பிரான்ஸ்), சிவரஞ்சன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியும், கனடாவில் வசிப்ப வர்களான துசான், றொசான், ஜேர்மனியில் வசிப்பவர்களான வனஜா, அம்சா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2008) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*(77205)* தகவல்:
*பண்ணாகம், சுழிபுரம்.* துரைராசா நவமணிதேவி (மகள்)

### திருமதி விக்னராஜா மல்லிகாதேவி



காளிகோயிலடி, மல்லாகத்தைப் பிறப் பிடமாகவும் கொழும்பு 15 ஐ தற் காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி விக்ன ராஜா மல்லிகாதேவி 09.08.2008 சனிக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி புரம் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மக ளும், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை மற் றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், விக்னரா ஜாவின் அன்பு மனைவியும், கிஷாந்தன், கிஷாந்தினி, கிஷாந் தீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காஞ்சனா, றமேஸ் ஆகி யோரின் மாமியாரும், விமலாதேவி, சீதாதேவி, பத்மாதேவி, சுபத் திராதேவி,ராஜினிதேவி, வரதராஜா, குமாரராஜா, விஜயராஜா, காலஞ்சென்ற ரகுராஜா ஆகியோரின் மைத்துனியும், கமலா தேவி, விமலாதேவி, சௌந்தரராஜன், மகேந்திரராஜன், காலஞ் சென்ற ஜெயராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2008) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும். *(77197)* தகவல்:
*காளிகோயிலடி, மல்லாகம்.* கி.விஜயராஜா (மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்கிலிருந்து ஜோர்ஜியா விலகும்?

ரஷ்ய நாட்டின் விமான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஜோர்ஜிய அணியை ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து விலக்கிக் கொள்வது குறித்து அந்நாட்டு அரசு ஆலோசித்து வருகிறது.



தெற்கு ஒசிடியா பகுதி பிரச்சினை காரணமாக ஜோர்ஜிய நாட்டின் மீது ரஷ்ய விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜோர்ஜிய அணி ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து விலகிக் கொள்வது குறித்து ஆலோசித்துள்ளது. இதனை அந்நாட்டு ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இறுதி முடிவை நாட்டின் அதிபர் மேற்கொள்வார் என்று கூறியுள்ள ஒலிம்பிக் சங்கம், சர்வதேச நாடுகள் ஜோர்ஜியா மீதான தாக்குதலை ரஷ்யா நிறுத்திக்கொள்ள வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளின்போது, ஒருசில நாடுகள் இதற்கு முன்னர் புறக்கணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன என்றாலும் போட்டிகள் நடக்கும் போது ஒரு நாடு புறக்கணிக்கப் போவதாகக் கூறுவது இதுவே முதல் முறை.

# 3 ஆவது தங்கம் வென்றார் பெல்ப்ஸ்



நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் 3ஆவது தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளார். நேற்று நடைபெற்ற 200 மீற்றர் ப்ரீஸ்டைல் ரிலே போட்டியில் அவர் தங்கப்பதக்கத்தை வென்றார். அமெரிக்க நீச்சல் வீரரான மைக்கல் பெல்ப்ஸ், இந்த ஒலிம்பிக் போட்டியில் 8 தங்கப்பதக்கத்தை வெல்ல வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்தார். ஞாயிற்றுக்கிழமை நடந்த 400 மீற்றர் தனிநபர் மெட்லி பிரிவில் அவர் தனது முதல் தங்கத்தை வென்றார்.

அடுத்து நேற்று முன்தினம் நடைபெற்ற 400 மீற்றர் ப்ரீஸ்டைல் ரிலே போட்டியில் அவர் இரண்டாவது ஆவது தங்கத்தை வென்று இரண்டாவது உலக சாதனை படைத்தார்.

400 மீற்றர் ப்ரீஸ்டைல் ரிலே போட்டியில் அமெரிக்க அணியில் அவர் இடம்பெற்றார். இந்த பிரிவில் அமெரிக்க அணி 3:08:24 நொடிகளில் போட்டியை முடித்து தங்கப்பதக்கத்தை வென்றது.

இந்நிலையில் நேற்று நடந்த 200 மீற்றர் ப்ரீஸ்டைல் நீச்சல் போட்டியில் 1:42:96 நொடிகளில் போட்டியை முடித்து மூன்றாவது தங்கத்தை வென்றதுடன் இந்த ஒலிம்பிக்கில் தனது மூன்றாவது உலக சாதனை யையும் படைத்தார்.


23 வயதான மைக்கல் பெல்ப்ஸ் 5 தனிநபர் 3 அணி பிரிவு போட்டிகளில் பங்கேற்கிறார். ஒலிம் பிக்கில் 1972 ஆம் ஆண்டு 7 தங்கப்பதக்கங்களை வென்ற அமெரிக்க வீரர் மார்க் ஸ்பிட்ஸின் சாதனையை முறியடிக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

கடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் அவர் 6 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார். பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் மேலும் அவர் 2 தங்கப்பதக்கங்களை வென்றால் ஒலிம்பிக் போட்டிகளில் அதிக தங்கப்பதக்கம் வென்ற வீரர் எனும் சாதனையை நிகழ்த்துவார். மார்க் ஸ்பிரிட்ஸ், கால்லுவிஸ், பாவோ நூர்மி மற்றும் லொரிசா லொட்னினா ஆகியோர் இது வரை 9 தங்கப்பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர். (50)

# ஒலிம்பிக் நிகழ்வில் மஹிந்த தம்பதியினர்




ஒலிம்பிக்கின் ஆரம்ப நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக சீனாவுக்குத் தனது பாரியார் ஷிரந்தியுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விஜயம் செய்திருந்தமை அனைவரும் அறிந்த ஒரு விடயம். இது குறித்து 'கல்ப் ரைம்ஸ்' என்ற பத்திரிகை தனது பட விளக்கத்தில் இலங்கை ஜனாதிபதியின் பாரியாரை சிறிமாவோ பண்டாரநாயக்க என்று தவறாக குறிப்பிட்டுள்ளது. (50)



ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஆண்களுக்கான பிரிவில் தங்கம் வென்ற சீன அணி வீரர்கள் பதக்கங்களுடன்....

# ஜப்பான் வீரர் உலக சாதனை

ஆண்களுக்கான 100 மீற்றர் பிரெஸ்ட் ஸ்ரொக் நீச்சல் போட்டியில் ஜப்பான் வீரர் உலக சாதனை படைத்து



தங்கம் வென்றார். ஜப் பானைச் சேர்ந்த கதாஜிமா கொசுகே 100 மீற் றர் பிரெஸ்ட் ஸ்ரொக் பிரிவில் கடந்த ஒலிம் பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இதே பிரிவுப் போட்டியில் அவர் 58.91 வினாடிகளில் தூரத்தைக் கடந்து தங் கப்பதக்கத்தை வென்றார். இதன்மூலம் அவர் உல சாதனையும் படைத்தார். இதற்கு முன்னர் அமெரிக்காவின் பிரெண்டன் ஹன்ஸன் 59.13 வினாடிகளில் போட்டியை முடித்ததே

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்றுப் பிற்பகல் வரையானது)

| நிலை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 11 | 3 | 4 | 18 |
| 2 | அமெரிக்கா | 7 | 6 | 8 | 21 |
| 3 | கொரியா | 5 | 5 | 0 | 10 |
| 4 | இத்தாலி | 3 | 4 | 2 | 9 |
| 5 | ஆஸ்திரேலியா | 3 | 1 | 4 | 8 |
| 6 | ஜப்பான் | 2 | 1 | 2 | 5 |
| 7 | பிரிட்டன் | 2 | 0 | 1 | 3 |
| 8 | செக் | 2 | 0 | 0 | 2 |
| 9 | நெதர்லாந்து | 1 | 1 | 1 | 3 |
| 10 | ஸ்பெயின் | 1 | 0 | 1 | 2 |
| 10 | பின்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| 12 | அஜர்பைஜன் | 1 | 0 | 0 | 1 |
| 12 | இந்தியா | 1 | 0 | 0 | 1 |
| 12 | ருமேனியா | 1 | 0 | 0 | 1 |
| 12 | தாய்லாந்து | 1 | 0 | 0 | 1 |



ஒலிம்பிக் 100 மீற்றர் நீச்சல் பேர்ஸ்டிரோக் போட்டியில் தங்கம் வென்ற அமெரிக்க வீராங்கனை நடாலி காப்லின் வெற்றிக் களிப்பில்.......

# ஒலிம்பிக் நினைவுகள் 13

### 26ஆவது ஒலிம்பிக் போட்டி (1996)

26ஆவது ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில் 1996 ஆம் ஆண்டு ஜூலை 19 முதல் ஓகஸ்ட் 9ஆம் திகதி வரை நடைபெற்றது.

ஏதென்ஸ், பெல்கிரேட், மான்செஸ்டர், மெல்போர்ன், டொராண்டோ ஆகிய நகரங்களில் போட்டியை நடத்த நாடுகள் விண்ணப்பித்திருந்தன. குறிப்பாக, நவீன ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கி 100 ஆண்டுகள் நிறைவுபெற்றதையொட்டி, ஒலிம்பிக் முதலில் தொடங்கப்பட்ட ஏதென்ஸுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என பெரிதும் நம்பப்பட்டது. ஆனால், வாக்கெடுப்பில் அட்லாண்டா வெற்றி பெற்றது. 197 நாடுகளில் இருந்து 3,523 மகளிர் உள்பட 10,320 பேர் இப்போட்டியில் பங்கேற்றனர். 26 விளையாட்டுக்களில் 271 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

அப்போதைய அமெரிக்கா ஜனாதிபதி பில் கிளிண்டன் போட்டியைத் தொடக்கி வைத்தார். குத்துச் சண்டை வீரர் முகமது அலி, ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைத்தார். அவரை கௌரவிக்கும் விதமாக 1960 போட்டியில் வென்ற தங்கப்பதக்கத்துக்கு மாற்று வழங்கப்பட்டது.

தொடக்க நிகழ்ச்சியில் ஸ்லோவேனியாவைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனை லியான் ஸ்டுகெல்ஜி கலந்து கொண்டார். இதன் மூலம் அதிகமான வயதில் ஒலிம்பிக்கில் கலந்துகொண்ட பழமையான வீராங்கனை எனும் சிறப்பை அவர் பெற்றார். அப்போது அவருக்கு வயது 97 ஆகும்.

கனடாவைச்சேர்ந்த டோனவான் பெய்லி, 9.84 வினாடிகளில் 100 மீற்றர் தூரத்தைக் கடந்து உலக சாதனை படைத்தார்.

மைக்கேல் ஜான்சன் 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் ஓட்டங்களில் தங்கம் வென்றார். அதில் 200 மீற்றரை 19.32 வினாடிகளில் கடந்து உலக சாதனையும் படைத்தார்.

36 வயதில் நீளம் தாண்டுதலில் தங்கம் வென்றார் அமெரிக்காவின் கார்ல் லீவிஸ். இதன்மூலம் பாவோ நூர்மி, மார்க் ஸ்பிட்ஸ் ஆகியோருடன் ஒலிம்பிக் போட்டிகளில் 9 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றிய 3ஆவது வீரராக இணைந்தார்.

பலஸ்தீனியர்கள் முதன்முதலாக பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

தொழில்துறை சைக்கிள் பந்தயக்காரர்கள் அனுமதிக்கப்பட்டனர். 5 முறை டூர் டி-பிரான்ஸ் சம்பியன் மிகுயில் இந்துரியன் டைம் டிரையில் பிரிவில் முதலிடம் பெற்றார்.

அயர்லாந்தைச் சேர்ந்த நீச்சல் வீரர் மிக்செல் ஸ்மித் 3 தங்கம். ஒரு வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றினார். அவர் ஊக்கமருந்து எடுத்துக் கொண்டதாலேயே இச்சிறப்பை பெற முடிந்தது என்ற சர்ச்சை எழுந்தது. பின்னர் அந்தச் சோதனையிலும் அவர் வெற்றி பெற்றார்.

அமெரிக்க ஜிம்னாஸ்டிக் வீராங்கனை கெரி ஸ்டிரக், போட்டியில் பங்கேற்று கடைசியில் ஒரேகாலில் தரையில் ஊன்றி பார்வையாளர்களை அசத்தினார்.

அமிவான் டைகன் எனும் வீராங்கனை 4 தங்கம் வென்றார். இதன்மூலம் ஒரே போட்டியில் 4 தங்கம் வென்ற முதல் அமெரிக்க வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றார்.

அதிகபட்சமாக 197 நாடுகள் போட்டியில் பங்கேற்றன. அதில் 79 நாடுகள் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு பதக்கத்தைக் கைப்பற்றின.

முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட மகளிருக்கான கால்பந்து போட்டியில் அமெரிக்கா தங்கப் பதக்கத்தைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய (12.08.2008) உதயனில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் 8 இற்கான விடைகள்

வினாத்தாள் - 01(08)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) 2 | (02)1 | (03) 6 | (04) 5 | (05) கமலன் | (06)மஞ்சள் |
| (07)அப்பா | (08)1 | (09) 2 | (10) 23 | (11) 2 | (12)3 |
| (13) 3 | (14)d | (15) c | (16) e | (17) a | (18)e |
| (19) 48 | (20)21 | (21) 1/2 | (22) 3/8 | (23) C | (24)2 |
| (25) 3 | (26)4 | (27) 3 | (28) 4 | (29) 2 | (30)2 |
| (31) 1 | (32)1 | (33) 2 | (34) 3 | (35) 3 | (36)3 |
| (37) 2 | (38)2 | (39) 4 | (40) 3 | | |

வினாத்தாள் - 02

01. 1-பூமலர், 2-சனிக்கிழமை, 3-வாட்டிவதைக்க, 4-சுற்றிச்சுற்றி, 5-கமகம, 6-சின்னஞ்சிறு, 7-வதனம், 8-இலட்சணம், 9-மாலை, காலை, உச்சிப்பொழுது, நேரம், நேற்று, 10-குறுகிய, கமல, 11-தேனீக்கள், கதிர்கள், 12- மலரும்.
02. 1-நீரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின் குடிப்பது சிறப்பானது, 2-எமது நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
03. 1-தொலைக்காட்சி, 2-இளைப்பாறினான்.
04. 1-முதலுதவி, 2-ஐங்குரவர்.
05. 1-இரையும், 2-கடுவன்.
06. 1-எதிர்த்துப் பேசுதல், 2-நிறையச் சம்பாதித்தல்.
07. 1-உங்கள் கைகளைத் தட்டுங்கள், 2-நாங்கள் இப்போது நிறுத்துவோமா?, 3-மாதங்கள்.
08. 1-Library, 2-Bicycle, 3-Yellow
09. 1-3, 2-3
10. 1-6, 2-3, 3-5, 4-4
11. 1-2, 2-4, 3-2, 4-3, 5-1, 6-3, 7-1, 8-2, 9-1, 10-2
12. 1-பாதுகாப்பான புகையிரதக்கடவை,பாதுகாப்பான புகையிரதக்கடவை முன்னால்/ 2-வாகனம் செல்லத்தடை / நேரே செல்லத்தடை.
13. 1-220, 2-தரம் 1, தரம் 4, 3-தரம் 5, 4-1500.00, 5-எல்லா விடைக்கும் சரி வழங்குக.
14. 1-13m, 2-1070km, 3-8 தடவைகள், 4-14900km, 5-5/6, 6-300ml, 7-87.00, 8-11/12, 9-4 சதுர சென்ரி மீற்றர், 10-107, 11-சரியாக வரைந்திருத்தல்.
15. 1-ஆகாய விமானம், 2-நிலாவைப்பற்றி.
16. அறிவுறுத்தல்களுக்கமைய அமைக்கப்பட்ட வாக்கியங்கள்.

## நன்றி கூறுகின்றோம்

நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தின் வேண்டுகோளின் பெயரில் நெடுந்தீவு வாழ் மக்களுக்கு 07, 08.08.2008 ஆம் திகதிகளில் நெடுந்தீவு மக்களுக்கு உலர் உணவுகளை வழங்கிய கியூடெக்- கரிதாஸ் நிறுவனத்திற்கும் அதன் இயக்குநர் கி.யோ.ஜெயக்குமார் அடிகளாருக்கும் நெடுந்தீவு அபிவிருத்தி மையம் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை,
நெடுந்தீவு அபிவிருத்தி மையம், நெடுந்தீவு.


69ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இலங்கை வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும்

## பருவகாலத்திற்கான கணக்குகள்

நேற்றைய உதயனில் வெளியான மேற்படி தலைப்புடனான விளம்பரத்தின் 3 ஆம் பகுதியைப் பின்வருமாறு வாசிக்கவும்.

3. 18+சேமிப்புக் கணக்குகள்

* 18+கணக்குகள் வைத்திருப்பதன் மூலம் உயர் கல்விக்கான புலமைப் பரிசில் ரூபா.30,000/- பெற வாய்ப்பு, திருமணப் பரிசாகத் தங்க நாணயம், பிறக்கும் முதற்குழந்தைக்கு பரிசுகள் மற்றும் காப்புறுதி வசதிகள்.
* 300இற்கும் மேற்பட்ட வங்கிக்கிளைகளில் கணனி வலைப் பின்னலூடான சேவை.
* 14+, 18+ கணக்குகளில் ரூபா.2,500/=, ரூ.5,000/= உம் அதற்கு மேலும் வைப்புச் செய்பவர்களுக்கு பிரபல கிரிக்கெட் வீரர் அஜந்த மெண்டிஸின் படம் பொறிக்கப்பட்ட ரீசேட் மற்றும் தொப்பிகள் வழங்கப்படுகின்றது.

வங்கிச் சேவையில் முன்னோடியாக 69 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள தேசத்தின் வங்கியாளரான இலங்கை வங்கி உங்களுக்கு நம்பிக்கையும் உத்தரவாதத்தினையும் வழங்குகிறது.

இன்றே அருகிலுள்ள வங்கி முகாமையாளரைத் தொடர்பு கொண்டு உங்கள் வங்கித் தேவையைப் பூர்த்தி செய்யுங்கள்.

"இலங்கை வங்கி தேசத்தின் வங்கி" BOC

நேற்றைய பதிப்பில்14+ என்பதற்குப் பதிலாக 40+ என பிழையாக அச்சாகி விட்டது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். (ஆசிரியர்)


## 'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' எனும் நிகழ்வு வேலணையில்

யாழ்ப்பாணம், ஓக.13

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட உப அலுவலக நூலகங்களில் 'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' என்னும் நிகழ்வு இன்று புதன் கிழமை உப அலுவலக பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெறவுள்ளது.

உப அலுவலகத்திற்குட்பட்ட நயினாதீவு,புங்குடுதீவு,வேலணை,அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய உப–அலுவலக பணிமனைகளில் இத்திட்டம் நிறைவேற்றப் படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக வேலணை பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தெரிவித்துள்ளார். (95)

## தவறிவிட்டது

கட்டுப்பிலானை, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்னும் முகவரியுடைய துரைராசா காந்தரூபன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (710550905V), தொழில் அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் என்பன கோப்பாய் கண்ணகி அம்மன் கோவிலடியில் 09.08.2008 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

## தவறிவிட்டது

சாவகச்சேரி, கச்சாய் வீதி, முதலாம் கட்டைக்கும் சிவன் கோயிலுக்குமிடையில் தங்கக் கைச்சங்கிலி கடந்த சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மனமுவந்து ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: மா.மனோகரன்,
இல.256, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
T.P.: 0779361324.


புலமைப்பரிசில்திட்டம் 2008

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma inWeb page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Designing 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in AutoCAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

80% OFF

மாணவர் நலன்கருதி Lab இணையமும் இணைக்கப்பட்டுள்ளது

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

Multimedia Projector மூலமான விரிவுரைகள்

50% OFF

Diploma in multimedia ~~5,500~~ 2,750
Diploma in Video Editing ~~6,500~~ 3,250

ஆரம்பம்:*
15/08/2008 - 09 or 02
16/08/2008 - 09 or 01
17/08/2008 - 09 or 01
18/08/2008 - 02PM
20/08/2008 - 02PM

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250


# மரண அறிவித்தல்கள்

## கனகசபை பாலசுப்பிரமணியம்

(அம்மான் சின்ராசு)

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பாலசுப்பிரமணியம் நேற்று (12.08.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை- இளையபிள்ளை தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற வைரமுத்து- கண்ணம்மா தம்பதியரின் மருமகனும் ரதிராணியின் அன்புக் கணவரும் சுந்தரரூபன் (லண்டன்), சுரேஸ்காந் (லண்டன்), தாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் டானினியின் அன்பு மாமனும் பா்வினின் அன்புப் பேரனும் சிவக்கொழுந்து, சிதம்பரப்பிள்ளை, கந்தசாமி, மயில்வாகனம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.08.2008) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால். (சி/554129)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பத்மாவதி இராமநாதன்



கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி இராமநாதன் 11.08.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம்- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வல்லிபுரம்- சற்குணவதி தம்பதியரின் அன்பு மருமகளும் குகநேசன் (டென்மார்க்), குக்பிரியை, குகவதனி, குகாஜினி, கஜமுகன், வைகுந்தன், சங்கரன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயும் இரட்ணம், சௌந்தரநாதன், தீபன், சந்திரவதனி, (டென்மார்க்), வாணி, கேமாங்கினி, யஸ்மலர் ஆகியோரின் அன்பு மாமியும் லாவர்ண்யா, நேரியன், தேவகி, நிருஜா, ஸோபியன், புங்கவி, சங்கவி, சேயோன், புகழினி, நிச்சிந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'குகன் இல்லம்',
கல்வளை,
சண்டிலிப்பாய். (77190)

தகவல்:
இ.கஜமுகன்
(மகன்).

## வல்லிபுரம் நகுலேஸ்

(Retd.Asst. Supdt.Of Surveyors)



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.398 (572), கே.கே.எஸ்.வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நகுலேஸ் 09.08.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஏகாம்பரம்- கருணாகடாட்சி தம்பதியரின் மருமகனும் செந்தில்தேவியின் அன்புக் கணவரும் மீராவின் (Civil Engineer, Peradeniya) அன்புத் தந்தையும் கஜேந்திராவின் (Mechanical Engineer) மாமனும் மகேஸ்வரி, இராஜமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயக்குமார், வாகீசன், இரவீந்திரன், இருகுவர்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2008) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 398 (572),
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (77199)

தகவல்:
மனைவி,
மகள்.

## சரவணமுத்து தியாகராஜா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா நேற்று (12.08.2008) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுபத்திராதேவியின் அன்புக் கணவரும் தினேஷ், தர்சிகா, ஆகியோரின் தந்தையும் யோகராஜா காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, ஆனந்தராஜா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.08.2008) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளாக வீதி,
திருநெல்வேலி. (77199)

தகவல்:
இரங்கநாதன் (மைத்துனர்),
செல்வராசா (சகோதரன்).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org











திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தின் விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகியது.
யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கண்காட்சியை திறந்து வைப்பதையும், அருகில் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். பாதுகாப்புக்கான பயிரியல் தொழில்நுட்ப முறையில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் குறித்து பிரதிப் பணிப்பாளர் சிவகுமார், அரச அதிபர் மற்றும் விருந்தினர்களுக்கு எடுத்துக் கூறுவதை இரண்டாவது படத்திலும் காட்சியைப் பார்வையிடும் மாணவர்களையும் பொதுமக்களையும் ஏனைய படங்களிலும் காணலாம்.
*(படங்கள்: லக்ஸ்மன்)*

# விவசாயத்துறையில் நவீன உத்திகளைக் கையாண்டால் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்

## அரச அதிபர் கண்காட்சியில் உரை

நல்லூர்,ஓக.13

விவசாயத்துறையில் நவீன உத்திகளைக் கையாண்டால் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அதனை எடுத்துக்காட்டும் வகையில் இந்த விவசாயக் கண்காட்சி அமைந்துள்ளது. யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள விரிவாக்கற் பிரிவு, விவசாயத் திணைக்களம், ஆராய்ச்சி, கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், விவசாய பீடம் ஆகியன இணைந்து நடத்தும் விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி, பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் தலைமையில் திருநெல்வேலியில் நேற்று ஆரம்பமாகியது.

கண்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ்.அரச அதிபர் கணேஸ் தமது உரையின் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இன்று எமது தேவைகளை நிறைவு செய்வதற்குத் தேவையான அறிவை மாணவர்களும் விவசாயிகளும் பெறவேண்டும்.

நவீன தொழில்நுட்ப முறைகளூடாக சேதன விவசாயச் செய்கைகளை விருத்தி செய்ய வேண்டும்.

உணவுகளில் நஞ்சுத்தன்மை என்பது இன்று ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

இதற்குத் தீர்வு காண நஞ்சுத் தன்மைகளற்ற பீடை கொல்லிகளைப் பயன்படுத்தக் கூடிய அறிவு இன்றியமையாததாகும்.

இங்கே மிகவும் கூடுதலான தொழில் நுட்பங்களைப் பய்ன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளக் கூடிய செயல் முறை நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

விவசாயிகள் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களிலிருந்து மீண்டு, சிறந்த முறையில் உற்பத்திகளை மேற்கொள்ள இது உதவும்.

இங்கே சமுகமளித்துள்ள எமது பிரதேச செயலர்களும், உதவி அரசாங்க அதிபர்களும் தத்தமது பிரதேசங்களில் சேதன விவசாயம் குறித்து மக்களுக்கு எடுத்துக் கூறி விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கு உகந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இக்கண்காட்சி கைகொடுக்கின்றது.

பலதரப்பட்ட நிலையில் உள்ளவர்களும் கண்காட்சிக்கு வருகை தந்துள்ளார்கள். இவர்கள் தத்தமது துறைகளூடாக எமது பொருளாதார வளங்களைக் கட்டியெழுப்புவதில் ஆக்கமுடன் செயற்படல் வேண்டும்.

காலச் சூழலில் யாழ். குடாநாட் டின் வளங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதை விளக்கும் வகையில் ஒரு முக்கியத்துவம் நிறைந்த பணியை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளமை பயனுள்ளது - என்றார்.

விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (விரிவாக்கம்) சி.சிவகுமார் தனது தலைமையுரையின் போது கூறியதாவது:

யாழ்.மாவட்டத்தின் வளங்களைப் பயன்படுத்தியும் சேதன விவசாய முறைகளூடாகவும் எமது மக்கள் நச்சுத் தன்மையற்ற உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய முடியும்.

இதற்கு எடுத்துக் காட்டாக நமது செயற்பாடுகள் அமையவேண்டும் என்பதில் இக்கண்காட்சி முக்கியத்துவம் பெறுகிறது.

இங்கே உள்ள பல்வேறு பகுதிகளுக்குமான தொழில் நுட்ப முறைகளை விவசாயிகளும் மாணவர்களும் அறிந்து கொள்வதுடன் அவற்றைப் பயன்படுத்தி தரமான காய்கறி வகைகளை உற்பத்தி செய்ய முன்வரவேண்டும்.

விவசாயத் திணைக்களம் இதற்காக விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் உதவத் தயாராக உள்ளது.

இந்தக் கண்காட்சியூடாகப் பெறும் தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி தரமான நச்சுத்தன்மையற்ற உணவுகளை மக்கள் பெறக் கூடியதாக உங்களது செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதே எமது எண்ணமாகும் - என்றார். (203-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### சமாந்தரமாகச் சைக்கிளில் சென்றோர் வயோதிபப் பெண்ணைக் காயப்படுத்தினர்

யாழ்ப்பாணம்,ஓக.13

வீதியில் சமாந்தரமாக சைக்கிளில் சென்ற பாடசாலை மாணவிகள் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணை ஒன்றன் பின் ஒன்றாக மோதிக் காயப்படுத்தினர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

கொடிகாமம் பெரியநாவலடியைச் சேர்ந்த முருகன் சரஸ்வதி (வயது 78) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (203-207)

### சாவகச்சேரி நீதிமன்றங்களுக்கு ஐந்து உத்தியோகத்தர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.13

சாவகச்சேரி நீதிமன்றங்களுக்கு ஐந்து உத்தியோகத்தர்கள் நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதிவான் நீதிமன்றுக்கு மூன்று சுருக்கெழுத்தாளர்களும், மாவட்ட நீதிமன்றுக்கு இரண்டு எழுதுநர்களும்.நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (203-207)



நோர்வேயில் வசிக்கும் இளங்கோ பாலசிங்கம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகத்துக்கு நான்கு கணனிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இக்கணனிகளை இளங்கோ பாலசிங்கத்தின் உறவினரும் வாழ்வக நிர்வாகசபை [illegible] சம்பிரதாயபூர்வமாக வாழ்வகத் தலைவரி[illegible]ம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வாழ்வக நிர்வாகிகளும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வழுக்கையாற்று புனரமைப்பு தொடர்பான பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.13

வழுக்கையாற்று புனரமைப்புத் தொடர்பான கூட்டம் அரசாங்க அதிபர் தலைமையில் நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இத் திட்டத்தோடு சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டு வழுக்கையாறு தொடர்பான ஆலோசனையும் விளக்கங்களும் வழங்க இருப்பதோடு விவசாயிகளின் கருத்துக்களும் பெறப்படவுள்ளது.

வழுக்கையாற்றுடன் தொடர்புடைய சகல விவசாய சம்மேளன பிரதிநிதிகளும், விவசாயிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (203)

### விவசாயக் கண்காட்சியை முன்னிட்டு பஸ்சேவை

யாழ்ப்பாணம்,ஓக.13

விவசாயத் திணைக்களத்தினால் நேற்றுத் தொடக்கம் நடத்தப்பட்டுவரும் விவசாய விலங்கு வேளாண்மைப் பொருள்களின் கண்காட்சிக்குச் செல்லும் கல்வயல், மட்டுவில், சரசாலை ஆகிய கமக்கார அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அமைப்புகளின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கொடிகாமத்திலிருந்து கனகன்புளியடி ஊடாகச் சேவையில் ஈடுபடும் பஸ் கண்காட்சி நடைபெறும் இடத்திற்குச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (203-207)

### சாவகச்சேரியில் பயிற்சிநெறி வெள்ளிக்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.13

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தையல், மற்றும் கேக், ஐசிங் பயிற்சி நெறிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

கழகத் தலைவர் லயன் வீ.வீ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட முன்னாள் ஆளுநர் லயன் செ.இராகவன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சி நெறிகளை ஆரம்பித்து வைப்பார்.

கழக அலுவலகத்தில் நடைபெறும இந்த நிகழ்வில் 306பி1 மாவட்டத்தின் மாவட்ட, பிராந்திய, வலயம் ஆகிய[illegible] தலைவர்களும் கலந்து கொள்வர் என [illegible]கச் செயலாளர் லயன் செ.கா.நவரத்தினம் தெரிவித்தார். (203-207)

# தற்காலத்தில் எழுந்துள்ள சிக்கல்களை எதிர்கொள்ள புதிய முயற்சிகளும், நவீன கல்வி முறையும் அவசியம்

முழு இலங்கைத் தீவும் மோசமான பொருளாதாரப் பின்னடைவை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது. மற்றைய பகுதிகளோடு ஒப்பிடும் போது யாழ்ப்பாண மக்களுக்கு வாழ்வாதாரத்திற்கு வேறு சில வசதிகளிருந்தாலும் உழைத்துச் சாப்பிடுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. போக்குவரத்துப் பிரச்சினை முதலாக வேறு பல காரணங்களாலும் மக்கள் பெரிதும் துன்பப்படுகிறார்கள். ஓரளவிற்கேனும் இத்துன்பத்திலிருந்து மீள்வதற்கு எமது பௌதீக மற்றும் அபௌதிக வளங்களைப் பயன்ப

வை.சந்திரபாலன்
கொக்குவில்.

டுத்த நாம் முயற்சியெடுக்க வேண்டியது காலத்தின் தேவை.

இப்படியான போர்ச்சூழலில் எந்தத் தொழிலுமே செய்யமுடியாது. ஏதோ கஷ்டப்பட வேண்டியதுதான் என்று அலுத்துக் கொள்ளும் பலரை நாம் அன்றாடம் சந்திக்கின்றோம். மேலோட்டமாகப் பார்த்தால் அவர்கள் சொல்வது சரியென்று தோன்றும். ஆனால் விஷயங்களை நன்கு ஆராய்ந்து பொதுவான சில கோட்பாடுகளை நாம் கைக்கொண்டு முயற்சியெடுப் போமாயின் இச்சூழலில் கூட நாம் ஓரளவிற்கேனும் தன்மானத்துடன் வாழ வழி பிறக்கும். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக நாம் ஏதிலிகளாக வந்துவிட்ட காரணத்தால் எல்லா மக்களுமே ஒன்றுக்கும் தகுதியில்லாதவர்கள் என்று கருதிக்கொண்டு, வெளிநாட்டு நிறுவனங்களும், நமது அரசாங்கமும் எமக்குப் பிச்சை போடும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இலவசமாக எதையும் பெற்றுக்கொள்ள விரும்பும் மனப் பான்மை எமது சமூகத்தில் காணப்படுவது உண்மை. அதன் காரணமாக பொருள்களின் பெறுமதியையும் அதைப் பெற்றுக்கொள்ள நாம் கொடுக்கும் விலையையும் கருத்திற் கொள்ளாது, முண்டியடித்து வாங்குகிறோம். வழங்குபவர்களும், சிபார்சு செய்பவர்களும் கூட ஏதோ படியளக்கும் பெருமான்கள் போல நடந்து கொள்கிறார்கள். சில வேளைகளில் பல நிபந்தனைகளைக் கூட விதிக்கிறார்கள். மிகவும் மனச் சங்கடத்துடன் பல மக் கள் இவற்றைப் பெற்று வாழ்க்கை நடத்துகிறார்கள். இதிலிருந்து ஓரளவிற்கேனும் மக்களை மீட்டெடுக்க எமது சமூகத்திலுள்ள திறமைசாலிகள் முயற்சியெடுக்க வேண்டும்.

போர் காரணமாகத் தொழில் முயற்சிகளில் ஈடுபடத் தயக்கம் காட்டும் நாம், கொண்டாட்டங்கள் தொடக்கம் கோயில் கட்டுவது வரை மிகவும் முனைப்போடு செய்து கொண்டிருக்கின்றோம். அதை விட ஒரு சிறிய விகிதத்தினர் அகப்பட்ட வசதிகளைப் பயன்படுத்தி வீணான ஆடம்பரச் செலவுகளிலும் ஈடுபடு கிறார்கள். ஆகவே எமது வாழ்வாதா ரங்களை வளப்படுத்தும் நோக் கிலும் நாம் கவன மெடுக்க வேண்டி யது அவசியம்.

எமது வாழ்வாதாரங்களை வளப்படுத்தும் முயற்சியில் நாம் இறங்கும் போது உலகத்தில் தற்போது நடைமுறையிலுள்ள கோட்பாடுகளை உள்வாங்குவதோடு நாம் இதுவரை கண்டிராத வசதி வாய்ப்புகளையும் தேடிக்கண்டுபிடிக்க முயற்சியெடுக் கவேண்டும். தலைமுறைகளாக எல்லோரும் போட்டி போட்டு சிலர் ஜெயிக்கவும் பலர் தோற்கவும் காரணமாக அமையும் விஷயங்களை ஒதுக்கி வைத்து விட்டு, வெளி உலகத்தை முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவிற்கேனும் புரிந்து கொண்டு நாம் நமது வாழ்க்கையைத் திட்டமிட முன்வர வேண்டும்.

### கல்வியில் புதிய நோக்கு

யாழ்ப்பாண மக்களின் பெரும் சொத்து கல்வி என்பதும் அது சென்ற பல தலைமுறைகளை நன்றாக வாழ வைத்ததென்பதும் உலகறிந்த உண்மை. அதற்காக நாம் கல்வியை நமது முன்னோர்கள் பார்த்த அதே நோக்கில் தான்பார்க்க வேண்டும் என்று அடம்பிடிப்பது காலத்திற்குப் பொருந்தாது. பிள்ளைகள் கல்விகற்க ஆரம்பிக் கும் போதே நீ ஒரு வைத்தியனாகவோ அன்றி ஒரு பொறியியலாளராகவோ வர வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லி வைக்கின்றோம். எத்தனையோ துறைகள் வளர்ச்சியடைந்துவிட்ட இக்காலத்தில் நாம் இக் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்துவது பொருந்தாது. அண்மையில் பத்திரிகையில் வெளிவந்த, சித்தியடைந்த சில மாண வர்களின் பேட்டிகளில் வேறு விஷயங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும் கூட, வைத்தியர், பொறியியலாளர் என்று நாம் ஊட்டிவிட்ட சில விஷயங்கள் வெளிப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். சிலருடைய வாழ்க்கை நோக்கம் அதுவாக இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் வேறு துறைகளைப் பற்றி போதிய

## உலகில் நடைமுறையிலுள்ள கோட்பாடுகளோடு, இதுவரையில்லாத வசதி, வாய்ப்புகளையும் தேடிக் கண்டறிய வேண்டும்.

ஆ லின்மையால் இக் கருத்து வெளிப் படும் தன்மையும் உண்டு. சம்பளத்திற்கு வேலை செய்யும் விரும்பமும், இளைப்பாற்று ஊதியம் பெற்றுக்கொள்ளும் ஆவலும் எமது மக்களிடைய ஊறிப் போயிருப்பது சில தெரிவுகளுக்குத் காரணமாகிறது. தற்காலத்தில் வளர்ச்சியடைந்திருக்கும், வேறு சில துறைகளைப் பற்றியும் மற்றவர்களைச் சார்ந்திராத பொருளாதார வழிகளைக் கொண்ட வேறு சில தொழில் வாய்ப்புகளைப் பற்றியும் மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த எமது சமூகத்தின் முன்னோடிகள் முயற்சியெடுக்க வேண்டும். கூடிய உழைப்புத் தேவைப்படும் விஷயங்களில் ஈடுபடும் மனநிலை இல்லாத போது நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி அவற்றைத் தட்டிக்கழிப்பது எமது வழமையாகிவிட்டது. சில வாரங்களுக்கு முன்னர் பொதிகைத் தொலைக் காட்சியில் பேட்டியளித்த ஒரு நிறுவன அதிபர் கணனி தொடர்பான ஒரு துறையில் நிபுணத்து வம் அடைந்த பலர் வருடத் திற்கு ஒரு கோடி ரூபா ஊதியம் பெற்றுக் கொள்வவ தாகக் கூறினார். இப்படி நம்மால் அறியப் பட வேண்டியன பல உள. இதில் நமக்கு ஏற்படும் பாதிப்பு என்னவெனில் எல்லாவற்றையும் அறியக் கூடிய வசதி வாய்ப்புகள் உள்ளவர்கள் மற்றவர்களோடு இவற்றைப் பகிர்ந்துகொள்ள முன்வராமைதான்.

*(வளரும்)*

## நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் படும் இன்னல்கள்

சம்பூர், மூதூர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் வசித்து வருகினறனர். திருகோணமலை கலாசார மண்டபத்தில் வசிக்கும் மக்களிடம் சொந்த இடத்தில் எப்படி இருந்தார்கள், தற்போது நலன்புரி நிலைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது பற்றி கேட்ட போது அவர்களிடம் இருந்து கிடைத்த பதில்கள்.



* 10 அடி அளவான வீட்டிற்குள் ஐந்துபேரும் பொருள்களுடன் இருக்கிறோம். மின் விசிறிகள் வேலை செய்யாது. மின்சாரம் சரியாகக் கிடைப்பதில்லை.


* சாப்பாடு, தண்ணீர், மலசலகூடம் போன்ற வசதிகள் குறைவு. எங்கள் சொந்த ஊரில் எங்களால் இயன்றளவு உழைத்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம் .இங்கிருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.

* எல்லோரும் ஒன்றாக இருக்கிற காரணத்தால் படுக்கை, இடவசதி பற்றாக்குறையாக இருக்கிறது. சில சமயங்களில் கூலி வேலைக்குத் தான் செல்கிறோம். அந்த வேலை மாதத் தில் ஒரு நாளோ அல்லது இரண்டு நாள்களோ மட்டும்தான் கிடைக்கும். 700 ரூபா வரை சம்பளமாகக் கொடுப்பார்கள்.

* இதற்கு முன் மட்டக்களப்பு சிவத்தியான் முகாமிலிருந்து சிங்கள மகாவித்தியாலயத்துக்கு சென்றோம். அங்கு பொருள்களுக்குப் பிரச்சினை இல்லை. மண்எண்ணெய் கூட கிடைத்தது. இங்கு அத்தகைய வசதிகள் கிடைப்பதில்லை. இங்கு ஒரு மாதத்தில் 10 கிலோ மாவும் அரைக்கிலோ சீனியும் சிறிதளவு பருப்பும் கிடைக்கிறது.

எங்கள் ஊராக இருந்தால் விவசாயம் செய்து எங்களால் சாப்பிட முடியும் . இங்கிருந்து நாங்கள் என்ன செய்வது? தற்போது வாழ்க்கையில் நாங்கள் செய்திராத வேலைகள் எல்லாம் செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், அப்படியான வேலைகள் கூட எங்களுக்குக் கிடைப்பதில்லை.

*(நன்றி: மீண்டும் வாழ்வோம் Inter News)*




தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் நான்காவது ஆண்டு பூர்த்தி விழா நிகழ்வு அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச லயன்ஸ் கழக 306 பி, மாவட்ட உப ஆளுநர் லயன் லக்ஸ்மன் விஜேசிங்க மாணவியொருவருக்கு மூக்குக் கண்ணாடி அணிவிப்பதையும் பிரதேசத்தில் சிறப்புப்பணியாற்றிய சுகாதாரத் தொண்டருக்கு லயன் சீமாட்டி அலோமா விஜேசிங்க சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: தென்னவன்)*

## நாகை மீனவர்கள் 10 பேரை இலங்கை தடுத்து வைத்துள்ளது

நாகபட்டனம், ஓக.13

நாகபட்டினம் மாவட்டத்தில் இருந்து கடந்த ஏழாம் திகதி தொழிலுக்குச் சென்ற மீனவர்களில் பத்துப் பேரை இலங்கைக் கடற்படை தடுத்து வைத்திருப்பதாக அங்கிருந்து திரும்பிய மீனவர்கள் தகவல் தெரிவித்துள்ளனர். இதனால் அந்தப் பிரதேசம் எங்கும் பெரும் பதற்றம் நிலவுகிறது.

நாகை மாவட்டம் கோடியக் கரையைச் சேர்ந்த மீனவர்கள் பலர் 7ஆம் திகதியன்று தொழிலுக்குச் சென்றவர்கள் அவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய் யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 10பேர் தவிர்ந்த ஏனையோர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

பத்துப்பேரைக் கடற்படை தடுத்து வைத்திருப்பதால், நாகபட்டின மீனவர்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது. (அ-1)

## பயிற்சிப்பட்டறை

வலி வடக்கு, ஓக. 13

மக்கள் சேவைக்கான ஊடகம் என்னும் கருப் பொருளிலான பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகங்கள் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர்களான ராசிக பெரேரா, ரவிச்சந்திரலால், சுமன் திலக பண்டார ஆகியோர் விரிவுரைகளை நடத்தினர்.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் ஊடக வள பயிற்சி நிலைய மாணவர்கள் உட்பட சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். (203-86)




ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா தேவராஜா (யூலன்)

(யாழ்.மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளி)

மண்ணில்: 28.12.1978

விண்ணில்: 13.08.2007

துடிதுடிப்பான உங்கள் செயல்கள்
கள்ளம் கபடமற்ற உங்கள் புன்னகை
தன்னலமிலா உங்கள் கடமையுணர்வு
சூதுவாதறியா உங்கள் பண்பு
கலங்குகின்றோம் ஒரு வருடமாய்
இன்று உங்களையிழந்து
இறைஞ்சுகின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக.

தகவல்: மனைவி
தேவராஜா மேரியற்னா.

பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
மேல் நீதிமன்றப் பின்புறம், யாழ்ப்பாணம். (77007)

**மாமரம் விற்பனைக்கு**

நீர்வேலியில் மாமரம் ஒன்றுவிற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம்.
மேலதிக விவரங்களுக்கு: 021 222 3000.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2கி.கிராம் மேல் வளர்ச்சி யடையக்கூடிய Bahira புறொயிலர் குஞ்சுகள் 13.08.08 புதன்கிழமை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* திருமகள் களஞ்சியம், சிவலிங்கப் புளியடி.
* மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* [illegible] சாவகச்சேரி.
* [illegible] ரேடர்ஸ், கல்வியங்காடு.

(77163)

**அருள் முருகன் திருமணப் பணியகம்**

இங்கிருக்கும் தகுதிகள் மிக்க மணமக்களுடன் இப்பொழுது வெளிநாடுகளில் P.R. குடியியல் அந்தஸ்துடன் உயர் கல்வி, பதவிகள், தரங்கள் நிலைகளில் உள்ள யாழ்.மாட்ட மணமக்களது பெற்றோரும் வெளிமாட்டங்கள்/ வெளிநாடுகளில் இருந்தும் பணியகம் வழங்கும் பணிகளை நாட ஆரம்பித்துவிட்டனர். பணிகளையும் மணமக்கள் தெரிவுகளையும் விரும்பும் பெற்றோர் வரலாம். 03, யாழ்.வீதி (பெருமாள் கோயில் சமீபம்) யாழ்ப்பாணம். *அழைப்பு: 2229334.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையை தாமதமின்றி குறைக்கக் கோருகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு,ஓக.13

உலக சந்தையில் தற்போது எரிபொருள்களின் விலை வீழ்ச்சியடையத் தொடங்கியதைத் தொடர்ந்து இலங்கையில் அவற்றின் விலையை உடன் குறைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே. கட்சியின் எம்.பி. ரவி கருணாநாயக்கவே மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உலக சந்தையில் தற்போது எரிபொருள்களின் விலை குறையத் தொடங்கியுள்ளது. ஆனால், இங்கு இன்னும் அவற்றின் விலை குறைக்கப்படவில்லை.

எரிபொருள்களின் விலை உலக சந்தையில் கூடிய மறுதினமே இலங்கை அரசு இங்கும் அவற்றின் விலையைக் கூட்டுகிறது. ஆனால், குறையும்போது மட்டும் குறைப்பதில்லை.

இதன் மூலம் அரசு இந்த நாட்டு மக்களை நன்றாக ஏமாற்றுகிறது என்பது புரிகிறது. தற்போதைய விலைக்கு எரிபொருள்களை வாங்கிப் பாவிக்கமுடியாத நிலையில் மக்கள் உள்ளனர்.

உலக சந்தையில் தற்போது இவற்றின் விலை இறங்கியிருப்பதால் இலங்கையிலும் விலை இறங்கும் என்று மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள். அரசு மக்களின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றவேண்டும்.

எரிபொருள்களின் விலையை உடனடியாகக் குறைக்குமாறு இந்நாட்டு மக்களின் சார்பில் நாம் அரசிடம் வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றார். (சி)

# எஸ்.பி. திஸாநாயக்கவை எம்.பியாக்குவதற்குத் திட்டம்

கொழும்பு,ஓக.13

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் எம்.பியும் அக்கட்சியின் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு அக்கட்சியின் எம்.பியான கே. என். சொக்ஸியின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று ரவி கருணாநாயக்க எம்.பி. கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பான பேச்சுகள் கே.என்.சொக்ஸியுடன் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், பெரும்பாலும் இந்நடவடிக்கை வெற்றி பெறும் எனத் தாம் நம்புகின்றனர் என்றும் ரவி கருணாநாயக்க சொன்னார்.

கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் எஸ்.பி. திஸாநாயக்கவை மீண்டும் எம்.பியாக்க வேண்டும் என்றும், கே.என். சொக்ஸியின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை திஸாநாயக்கவுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் சிலர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆனால், எம்.பி. பதவியை விட்டுத்தர முடியாது என்று சொக்ஸி அண்மையில் கூறியிருந்தார். இருப்பினும், சொக்ஸியின் எம்.பி. பதவியைப் பெற்றுக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டவண்ணமே உள்ளன என்று ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் கூறினார்.

கடும் வயோதிபத்தை அடைந்துள்ள கே.என்.சொக்ஸி அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார் என்பதும் அவ்வப்போதுதான் நாடாளுமன்ற அமர்வுக்கு வருகை தருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (சி)

## பதவி வெற்றிடம் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓக.13

நில அளவைத் திணைக்களத்தின் அளவை உபகரணத் தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி, ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் சித்தி, தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு வருட இலத்திரனியல் அல்லது எந்திரவியல் பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் 'நில அளவையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களம், கிருல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு - 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 08.08.2008ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202)

# மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் சேவை உதவியாளர்களாக 35 பேர் தெரிவாகினர்

யாழ்ப்பாணம்,ஓக.13

மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் கடந்த ஏப்ரல் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெற்ற வாடிக்கையாளர் சேவை உதவியாளர் நேர்முகப் பரீட்சையில் தெரிவான 35 பேரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இவர்களுக்கான கடிதங்கள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தெரிவானவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பாடசாலை விடுகைப் பத்திரம், கல்விச்சான்றிதழ்கள், வதிவிட நற்சான்றிதழ், சிறிய அளவிலான இரண்டு புகைப்படங்கள், திருமணமானவராயின் விவாகச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் கன்னாதிட்டி மக்கள் வங்கி பிராந்திய தலைமைத்திற்கு வருகை தருமாறு மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர் த.க.ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

எம்.அனுஜா - நாவற்குழி, ரி. கானப்பிரியா - வல்வெட்டித்துறை, என்.கிரானு - சுன்னாகம், கே.ஏ. கோகுலகிருஸ்ணன் - உடுவில், பி.கஜேந்திரா - யாழ்ப்பாணம், கே. கமலக்சன் - சுன்னாகம், எஸ்.ஆர். கீர்த்திகா - நீராவியடி, சி.கிரீடன் - சுண்டுக்குளி, எஸ்.மயூரன் - சங்கத்தானை, செல்வி கே.நாகேந்திரன் - மீசாலை வடக்கு,

ஏ.நிமாலினி - புலோலி தெற்கு, ஆர்.எம்.நித்தியா - கல்வியங்காடு, ரி.பவித்திரா - வேலணை, ஆர்.பிரசாந்தினி - உடுப்பிட்டி, எஸ்.பிரசாந்தி - நல்லூர், எஸ்.ரஜீவன் - கொழும்புத்துறை, ரி.ரஜீவன் - கொக்குவில், ரி.ரஜிந்தன் - எழுதுமட்டுவாழ், ஐ.எம்.ரெபேக்கா - ஊர்காவற்றுறை, என்.சஞ்சீவ் - யாழ்ப்பாணம்,

ஏ.பி.சஞ்சீவ் - நல்லூர், ஜி. சரண்யா - கொக்குவில், எஸ்.சசீவன் - நீர்வேலி, வை.சசிரேகா - யாழ்ப்பாணம், ரி.சசிதேவி - சுதுமலை வடக்கு, ஆர்.கே.சயந்தினி - கோண்டாவில், ஜே.ஷராச்சி - வண்ணார்பண்ணை, கே.சிந்துஜா - திருநெல்வேலி, பி.சிந்துஜா - கொக்குவில், கே.சுபாசினி - துன்னாலை மத்தி,

எஸ்.கஜன் - கொக்குவில், எஸ். சுமனா - கைதடி, செல்வி எஸ்.தியாகலிங்கம் - சுண்டுக்குளி, எஸ்.துவாரகா - கல்வியங்காடு, வை. வானதி - சுண்டுக்குளி. (203)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.13

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரன் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'சூரியனை வென்ற பத்தினி' என்னும் தலைப்பில் சிவ. உமாசுதன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, நீர்வேலி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203)




# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



பவம்நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்கும் சாந்தம் பொறுமை சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்தும் தீருமே
சினமு மடங்குமே தேர்.

- யோகர் சுவாமிகள்.

## நல்லைக் காட்சி

ஐயோ என அடியார் அழுகுகண்டு மிக அலற
தாயோ தனையன்புகழ் கேட்டு மனம் உவப்ப
மாயோன் மருகனையே மக்கள் படை சூழ
பொய்யோ இதுமெய்யோ என ஈசன் மிகவினவி
கையோடு கையிலைவிட்டு ஈசனவன் வந்து
மெய்யே இது என அறிந்து மெய் மறந்து நிற்க
தாயாரும் தந்தையுமே தாம் வியக்கக் கண்டு
தனையனந்த விநாயகனும் தம்பிதனை அணைத்தான்.

- விகடகவி.

## சரணம் தர உனக்கு மனமில்லையா?

சரணம் தர உனக்கு மனமில்லையா? முருகா!
தருணம் இதுவே ஐயா! தன்னருள் தாருமைய்யா?
முருகா! முருகா!! முருகா!!! முருகா!!!!

சரவணனே! குகனே! சண்முகனே! என்று
சந்ததமும் கதறும் எந்தனை வந்தாட் கொள்ள!
சரணம் தர உனக்கு மனமில்லையா? முருகா!

நின்னகர் மிளிர்ந்திடும் தன்னகர் நல்லையிலே!
வண்ண மயிலின் மீது வடிவேல் ஏந்தியமரும்
கன்னியர் இருவரின் காதலரே கந்தா
நின்னருள் மலரடி என்னிடம் தந்தருள்!
சரணம் தர உனக்கு மனமில்லையா? முருகா!

- ஜெ.சுதர்சன், முதலாம் வருடம், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## வேலவனே துணையாய் வா!

கந்தா முருகா ஓடி வா
கலியுக வரதனே சிந்தையில் வா
உள்ளமெனும் கோயிலில் அமர வா
உண்மைகள் நிலைபெறச் செய்ய வா

அழகான மயிலிலே ஏறி வா
அன்பர்கள் நெஞ்சினில் உறைய வா
வேலெடுத்து வினைகளை அழிக்க வா
வேலவனே துணையாய் நிற்க வா.

இ.கஸ்தனி, மானிப்பாய்.

## கருணைவிழி காட்டியருள் நல்லைக்கந்தா

அருள்நல்லைப் பதியினிலே அமர்ந்தவனே
அடியார்க்கு அருள்செய்யும் வடிவேலனே
இருள்நீக்கி ஒளிநல்கும் இதுவேளையில்
இருகரமும் கூப்பியுந்தன் அடிநாடியே
வருவாய்நீ வருவாயென் றழைத்தேன்கந்தா
வரந்தாவென் சுகந்தாவென் மயில்வீரனே
கருணைவிழி காட்டியுயர் கலிவெருண்டோடச்
செய்யும்மயில் வாகனனே நல்லைக்கந்தா.

-சு.குகதேவன், தெல்லிப்பழை.

## பாமலர் சூடுவோம் நாளும்

தாமரைப் பூவில் தோன்றினாய்
தடாகமாம் சரவணை தாங்கிட
தூமலர் தோன்றிய நின் அழகை
தூக்கிப் பாலூட்டினர் கார்த்திகைப் பெண்கள்
தேமதுரத் தமிழ் பாட நாம்
தித்திக்கப் பாடல்கள் தந்தாய்
பாமலர் சூடுவோம் நாளும்
பரவச மாவாய் நல்லூர்க் கந்தா.

- மீசாலையூர் தெய்வகிருஷ்ணா.

## ஆட்கொள்ளும் ஆறுமுகா!

நல்லையம் பதிநின்று நல்லருளை நல்கி நிதம்
பொல்லா வினையகற்றும் புண்ணியனின் பொன்னடியை
எல்லாமே நீயென்று எண்ணித் தொழுமெமது
அல்லல் களைந்தென்றும் ஆட்கொண்டருளுமையா.

- ப.சின்னராசா, மருதனார்மடம்.

## வேலன் புகழோசை

அலங்காரக் கந்தனவன் கோவில் மணியோசை
அந்தணர் நாவசைவின் இனிய மந்திரவோசை
நாதமாய் ஒலித்திடும் நாதஸ்வரவோசை
தலையாட்ட வைத்திடும் தனித்தமிழோசை
பேரானந்தம் பெருக்கிடும் பேரிகையினோசை
பண்ணோடு மலர்பாடும் பஜனை ஒலியோசை
அடியவரின் இன் மொழியாம் அரோகராவோசை
ஓங்காரமாய் ஒலிக்கும் வேலன் புகழோசை.

பிரசாந், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட பாடசாலைகள் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்ப்படுத்துமாறு அறிவுறுத்து

## பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டதை அடுத்து

யாழ்ப்பாணம், ஓக.13

வவுனியாவில் விரைவில் நடத்தப்பட விருக்கும் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில், பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ள வீரர், வீராங்கனைகளைத் தயார் படுத்திவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாகாணக் கல்வித்திணைக்களம் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது.

மகாண மட்டப் போட்டிகளை வவுனியாவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பாதுகாப்புக் காரணங்களுக்காக அந்தப் போட்டிகள் பிற்போடப்பட்டிருந்தன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வன்னி படைத்தளபதியுடன், போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் பாதுகாப்புக் குறித்துக் கலந்துரையாடினார்.

மதவாச்சி சோதனை நிலையத்தில் இருந்து மாணவர்களை வவுனியாவுக்கு அழைத்துவந்து, மீளவும் அங்கு அனுப்புவது வரையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தருவதாக வன்னித் தளபதி தெரிவித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து மாகாணமட்டப் போட்டிகளை செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கல்வியமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக போட்டிகளில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களை தயார்ப்படுத்தி வைக்குமாறு வலயப் பணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதையடுத்து போட்டியாளர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (1)



நவாலி முருகானந்தா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினராக பங்குபற்றிய நவாலி சென்.பீற்றேஸ் பாடசாலை அதிபர் யோ.எட்வேட் பங்கிராஸ் பரிசு வழங்குவதை படத்தில் காணலாம்.

*(படம்: நவாலி செய்தியாளர்)*

## மென்பந்து சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்.தபாலக விளையாட்டுக் கழகத்தினால் அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுத்தாபனங்களுக்கிடையில் மென்பந்துச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்களை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து 'செயலாளர், யாழ்.தபாலக விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம்'என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு விளையாட்டுக் குழுச் செயலாளர் கேட்டுள்ளார். (203)

# 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டி; 'சுப்பர் 6' இற்கு ஆறு பாடசாலைகள் தெரிவு

வலி.வடக்கு, ஓக.13

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதல் சுற்றுக்கள் முடிவடைந்த நிலையில் 'சுப்பர் சிக்ஸ்'சுக்கு ஆறு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

'சுப்பர்சிக்ஸ்'சுக்குள் கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி என்பனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகள் முதல் சுற்றில் மூன்று பிரிவுகளில் விளையாடிய 15 பாடசாலை அணிகளில் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகளே 'சுப்பர் சிக்ஸ்' சுக்குள் நுழைந்துள்ளன.

சுப்பர் சிக்ஸ் சுக்குள் தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கு இடையேயான போட்டிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

போட்டிகள் லீக் முறையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# சாதனை படைத்த வி.கழகங்களின் வீர, வீராங்கனைகள்



யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டி ஆவரங்கால் இந்து விளையாட்டுக் கழகத்திற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.எ.அருமைநாயகம் வெற்றிக் கிண்ணம் வழங்கியபோது. *(படம்:நேசன்)*



யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையிலான கபடிப்போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டியில் மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வீராங்கனைகள் விளையாட்டு அலுவலர் கு.முகுந்தனுடன் காணப்படுகின்றனர். (86)



யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இடம்பெற்ற கபடிப்போட்டியில் ஆண்கள் பிரிவில் வெற்றிபெற்று, மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட பருத்தித்துறை பிரதேச செயலக அணி வீரர்களைப் படத்தில் காணலாம்.

# சாரணர்களுக்கான மாவட்ட மட்ட மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக.13

யாழ்.மாவட்ட சாரணர் சங்கம் மாவட்ட மட்டத்தில் மெய்வன்மைப் போட்டிகளை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தியது.

சங்கத்தின் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள் பங்குபற்றிய இந்தப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

### 7-9 வயதுப் பிரிவு

**75 மீற்றர் ஓட்டம்:** கு. சாருஜன்- ஜோன் பொஸ்கோ, பி.ருஷாந்-சென். பற்றிக்ஸ் கல்லூரி, பி. பெண்பீற்றர்சன் -சென். பற்றிக்ஸ் கல்லூரி.

**நின்று நீளம் பாய்தல்:** த. டிலக்ஷன்- ஜோன்.பொஸ்கோ, பி. பிரவீணன்- ஜோன். பொஸ்கோ, ம. றொக்சன்- நாவாந்துறை றோ.க.

**பந்து எறிதல்:** கு.சாருஜன்- ஜோன். பொஸ்கோ, அ. அன்ரனிடன்சன்- நாவாந்துறை றோ.க., பா. நிவேதிகன்- சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**சமநிலை ஓட்டம்:** வி.பிரவீணன்- ஜோன். பொஸ்கோ, அ. கிசான்- நாவாந்துறை றோ.க., சி. லிங்கேசன்-ஜோன். பொஸ்கோ.

**தடை ஓட்டம் :** கு.சாருஜன்- ஜோன். பொஸ்கோ, அ. அன்ரனிடன்சன்- நாவாந்துறை றோ.க., சு. பெனற்பீற்றர்சன்- சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

### 10-11 வயதுப் பிரிவு

**100 மீற்றர் ஓட்டம்:** ச.கோமேதகன்- யாழ். மத்திய கல்லூரி, செ. ஏனோக்றாஜ்- ஜோன் பொஸ்கோ, யோ.தேவறாஜ்- யாழ். மத்திய கல்லூரி.

**நின்று நீளம் பாய்தல்:** யோ.தேவறாஜ் - யாழ். மத்திய கல்லூரி, செ.ஏனோக்றாஜ்- ஜோன் பொஸ்கோ, அ.மு.ஸ்ரெபான்- சென். பற்றிக்ஸ் கல்லூரி.

**பந்து எறிதல்:** யோ.தேவறாஜ்- யாழ். மத்திய கல்லூரி, ச. கோமேதகன்-யாழ். மத்திய கல்லூரி, க. செபஸ்ரியன்- நாவாந்துறை றோ.க.

**சமநிலை ஓட்டம்:** ஜே. ரஜீவன்- நாவாந்துறை றோ.க., கொ.நத்தேனியர்- சென். பற்றிக்ஸ் கல்லூரி., கி. செபஸ்ரியன்- நாவாந்துறை றோ.க.

**தடை ஓட்டம்:** ஜே. ரஜீவன்-நாவாந்துறை றோ.க., அ. ஸ்ரெபான்- சென்.பற்றிக்ஸ் கல்லூரி, செ.ஏனோக்றாஜ்-ஜோன் பொஸ்கோ.

**அஞ்சல் ஓட்டம்:** ஜோன் பொஸ்கோ, யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

### 12-15 வயதுப் பிரிவு

**100 மீற்றர் ஓட்டம்:** யோ. தனுசன்- புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, செ. அஜித்- சென்.பற்றிக்ஸ் கல்லூரி, கி. விதுரன்-புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.

**குண்டு எறிதல்:** யோ.தனுசன்- புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, யோ.சிந்தீபன்- கொக்குவில் இந்துக் கல்லூரி, மோ.ஸ்ரீவண்ணன்- யாழ்.மத்திய கல்லூரி.

**நீளம் பாய்தல்:** யோ. தனுசன்-புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, ஜெ. ஜெசிந்தன்-புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, மோ. ஸ்ரீவண்ணன்-யாழ்.மத்திய கல்லூரி.

**100 மீற்றர் ஓட்டம்:** ஜெ. ஜெசிந்தன்- புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, த. பிரணவன்- யாழ்.மத்திய கல்லூரி, செ. அஜித்- சென்.பற்றிக்ஸ்

**தடை ஓட்டம்:** ம. கெயின்சன்-புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, ச. அலன்றினன்-யாழ்.மத்திய கல்லூரி, மோ. ஸ்ரீவண்ணன்-யாழ்.மத்திய கல்லூரி.

**4 X100 அஞ்சல் ஓட்டம் :** புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி.

### 16-18 வயதுப் பிரிவு

**200 மீற்றர் ஓட்டம்:** வே. அருள்ரூபன்- புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், க.விக்கினேஸ்வரன்-புனித அந்தோனியார் கல்லூரி, ம. டிலக்ஸன்-நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.

**800 மீற்றர் ஓட்டம்:** டோ.றிபிலிசாந்- புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், ர. திவாகர்-யாழ்.மத்திய கல்லூரி, ஜி.பகீரதன்- புனித அந்தோனியார் கல்லூரி.

**குண்டு எறிதல் :** ர. திவாகர்- யாழ். மத்திய கல்லூரி, ம. சஞ்சீவன் சென்.பற்றிக்ஸ் க.விக்கினேஸ்வரன், புனித அந்தோனியார் கல்லூரி.

**நீளம் பாய்தல் :** க.விக்கினேஸ்வரன்- புனித அந்தோனியார் கல்லூரி, ர. திவாகர்- யாழ். மத்திய கல்லூரி, நா. சஞ்சீவன்- கொக்குவில் இந்துக் கல்லூரி

**தடை ஓட்டம் :** ஆ.யூட் அனோஜன்- புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், ர.ராஜன்- புனித அந்தோனியார் கல்லூரி, ம. சிவர தன்- புனித அந்தோனியார் கல்லூரி.

**அஞ்சல் ஓட்டம்: 4 X200 :** புனித அந்தோனியார் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

(1-325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## கொழும்புக்குத் துணைபோகும் புதுடில்லி

இலங்கை விவகாரத்தில் - குறிப்பாக இலங்கை இனப் பிரச்சினை விடயத்தில் - இரகசிய இராஜதந்திர நடவடிக்கைகளையே தனது பேராயுதமாகவும், போராயுதமாகவும் பயன்படுத்தி வரும் புதுடில்லி அரசின் போக்குக் குறித்தும், அதன் ஒளிவு மறைவான காய் நகர்த்தல்கள் குறித்தும் இப்போது மெல்லமெல்லக் கசியும் தகவல்கள் ஈழத் தமிழர் தரப்பை அதிர்ச்சியிலும், விசனத்திலும், பெரும் கவலையிலும் ஆழ்த்துவனவாக உள்ளன.

ஈழத் தமிழரின் இனப்பிரச்சினை விவகாரம் இந்தியாவின் தென்கோடியில் - தமிழகத்தில் - பெரும் உணர்ச்சிப் பேரதிர்வுகளை ஏற்படுத்தக் கூடிய உணர்வு பூர்வமான அம்சமாகும்.

ஈழத் தமிழருக்கு அநீதி இழைக்கும் வகையில் புதுடில்லி நடந்து கொள்வது தமிழகத்தில் பெரும் பிரளயத்தைத் தோற்றுவிப்பதாக மட்டுமன்றி, தமிழகத்தின் அரசியல் ஆதரவில் தங்கி நிற்கும் புதுடில்லியின் தற்போதைய ஆட்சிப் பீடத்தையே மண்கவ்வ வைத்துவிடவும் செய்துவிடக்கூடியது என்பது வெளிப்படையான உண்மை.

இதனால் தற்போது புதுடில்லியில் ஆட்சிப் பீடத்தில் இருக்கும் மன்மோகன் அரசு, அதன் ஆரம்பம் முதலே இலங்கை விவகாரத்தில் தன் சூழ்ச்சிச் செயற்பாட்டுத் திட்டங்களை வெளிப்படையாக அல்லாமல் அரசல், புரசல் ஏதுமின்றி, ஒளிவு மறைவாகவே முன்னெடுத்து வருகின்றது.

அதுவும் இலங்கை விவகாரம் போன்ற முக்கிய அயலக விடயங்களைக் கையாளும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவி எம்.கே. நாராயணனிடம் ஒப்படைக்கப்பட்ட காலம் தொட்டு, இந்த இரகசிய இராஜதந்திரம், ஈழத் தமிழரின் நலனுக்கு உலைவைக்கும் இராட்சதச் சதித்திட்டமாக விரிந்து வருகின்றது என்பது பலருக்கும் - குறிப்பாகத் தமிழகத்துக்கு - மூடி மறைக்கப்பட்ட விவகாரமாக நீடிக்கிறது.

ஈழத் தமிழர் விவகாரத்தில் அவர்களின் விடுதலைப் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளை அழித்தொழித்து, மாற்றுத் தலைமை ஒன்றை உருவாக்கக் கங்கணம் கட்டி நிற்கும் நாராயணன் அணி, அதே நிலையில் முனைப்பாக - வெறியாக - இருக்கும் மஹிந்த அரசுடன் கைகோர்த்துச் செயற்படுவதில் வியப்பேதுமில்லை.

அதுவும் புலிகள் இயக்கம் புதுடில்லி அரசால் தடை செய்யப்பட்ட அமைப்பு. அந்த இயக்கத்துக்கு எதிராகப் புதுடில்லி நிர்வாகம் காய் நகர்த்துவதை இந்தியப் பின்புலத்தில் இருந்து நோக்கும்போது தவறு என்று கூறிவிட முடியாது என்பதும் ஏற்கத்தக்கதே.

ஆனால், ஈழத் தமிழர் நலனில் அக்கறையும், சிரத்தையும், கரிசனையும் இருக்குமாற்போல வெளிப்படையாகக் காட்டிக்கொண்டு -

தமிழகத்தில் உணர்வலைகளைக் கிளப்பக்கூடிய விடயம் என்பதால், புலி எதிர்ப்புக் கூட்டு நடவடிக்கையில் புதுடில்லியும், அதன் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன் தலைமையிலான குயுக்தி அணியும் இலங்கையுடன் கைகோர்த்துச் செயற்படுவதைத் தமது மறைமுக - இரகசிய நடவடிக்கையாகத் தொடர்ந்து முன்னெடுப்பது தான் ஈழத் தமிழருக்குப் பெரும் அதிர்ச்சியைத் தருகின்றது.

கடல் கண்காணிப்பை இறுக்குவதிலிருந்து, ஆயுத உதவிகள், பயிற்சிகள் உட்படப் பல கூட்டுச் செயற்பாடுகள் மூலம் ஈழத் தமிழர்களை நலிவடைய வைக்கும் இந்தியக் கைங்கரியத்தின் பெரும் பங்கும் பின்னணியும் நாராயணன் குழுவின் பெறுபேறுதான்.

இந்த அணிக்கு, 'உலகத் தமிழர்களின் தலைவர்' என்று தம்மை முன்னிலைப் படுத்தும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும் அவரது மாநில அரசும் இப்போது துணை போகின்றமை இன்னும் கேவலத்திலும் கேவலமாகும்.

புலிகளை அழிப்பதில் இலங்கையுடன் கொள்கை ரீதியில் இணங்கிக் கூட்டுச் சேர்ந்துள்ளது புதுடில்லி என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகும் அதேசமயம், அந்தக் கூட்டு முயற்சி வெற்றியளிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகத் தமிழகத்தில் புலிகளுக்கு எதிரான கட்டுப்பாடுகளை இறுக்குமாறு புதுடில்லி வழங்கிய வழிகாட்டலை கலைஞர் அரசு சிரமேற்கொண்டு முன்னெடுப்பதாகவும் கூறப்படுகின்றது. அண்மைக்காலத்தில் ஈழத் தமிழர் ஆதரவு மற்றும் புலிகள் சார்புப் போக்கை வெளிப்படுத்திவந்த பலர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டதன் பின்னணியில் புதுடில்லியின் புலி எதிர்ப்பு அழுத்தத்துக்குத் தமிழகம் துணைபோகும் வகையில் மண்டியிட்டிருக்கும் சூழ்நிலைமை காணப்படுகின்றது.

தமிழரை ஆயுதப் போராட்ட ரீதியில் அடக்கி, உரிமைகளுக்கான அவர்களின் பேரம்பேசும் வலுவைச் சிதைத்து, அவர்களை ஒடுக்கி, அடிமைப்படுத்தித் தமது காலின் கீழ் கொண்டுவந்து, ஆட்சி அதிகாரத்தைத் தாமே முழுமையாக சிங்களவர் பக்கம் வைத்துக் கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே கொழும்பு அரசின் ஒரே திட்டமாகும்; ஒருவகையில் பேரினவாத வெறியின் வடிவம் அதுதான்.

ஆகவே, தமிழருக்கு அரசியல் ரீதியான நியாயத் தீர்வு ஒன்றைத் தரும் எண்ணம் கொழும்பு அரசுக்குக் கிஞ்சித்தும் கிடையாது என்பதும் தெளிவு.

அதைப் புரிந்துகொண்டும் -

வெளிப் பகட்டுக்கு 'யுத்தம் தீர்வல்ல, அரசியல் தீர்வே ஒரே மார்க்கம்' என்று கிளிப்பிள்ளை போல வெறும் வாய்ப் பேச்சுக்கு மட்டும் அதனைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு -

அரசியல் தீர்வுக்கான கடும் அழுத்தத்தை ராஜபக்ஷ அரசு மீது பிரயோகிக்காமல் ஒளித்துப் பிடித்து விளையாடிக் கொண்டு -

மறைவில் புலி எதிர்ப்பு அல்லது புலி அழிப்பு நடவடிக்கைக்கு இரகசியமாகப் புதுடில்லி திட்டமிட்டுத் துணை போவது ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை முதுகில் குத்தும் துரோகமாகும்.

இந்தியாவை நம்பவே முடியாது என்ற தமிழர் தரப்பு சந்தேகத்தை உறுதிப்படுத்துமாற்போல காங்கிரஸ் அரசு நடப்பதும், தமிழக அரசு அதற்குத் துணைபோவதும் அபத்தத்திலும் அபத்தமாகும்.

# பொருளாதார அணுகுமுறையில் இந்தியாவின் அரசியல் நகர்வு

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை துறைமுகத்தில் மூழ்கடிக்கப்பட் டுள்ள கப்பல்களையும் ஏனைய தளபாடங்களையும் அப்புறப்படுத் தித் துப்புரவு செய்து கொடுக்க இந்தியா வாக்களித்திருக்கிறது. இது ராஜபக்ஷ அரசுக்கு இந்தியா வழங்கும் ஒத்துழைப்பையும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு அளிக்கும் ஆதரவையும் காட்டுவதாக உள்ளது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் பலமுனை தந்திரோபாயத்தில் அரசியல் நிலைப்பாட்டை அடக்கி வாசித்துக் கொண்டு பொருளாதார விடயங்களை உயர்த்தி நிறுத்துவதாக இது அமைவதாக இருக்கலாம். யாழ்ப்பாணத்துக்கு அப்பால் உள்ள காங்கேசன்துறை துறைமுகத்தில் மூழ்கிப் போயுள்ள கலங்களை அப்புறப் படுத்தி துப்புரவு செய்யும் யோசனை 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் முன் வைக்கப்பட்டது. அது அண்மையில் மீளவும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான கொழும்பின் போர் முன்னெடுப்பை இது ஆதரிப்பதாக இருப்பதாகக் கருதப்படுகின்றது.

### இந்தியாவின் புறக்கணிப்பு

ஓகஸ்ட் 1ஆம் திகதி சார்க் மாநாட்டின் போது அதன் ஒரு பக்கவாட்டு நிகழ்ச்சியாக விரிவான பொருளாதார பங்காளித்துவ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ராஜபக்ஷ சம்மதம் தெரிவித்திருந்த போதிலும் இந்தியா அதனை தட்டி கழித்துவிட்டது. இவ்வொப்பந்தம் சுதந்திர வர்த்தகத்துக்கும் கப்பல் கல சேவைகளுக்கும் வழிவகுப்பதாக இருந்திருக்கும்.

இந்த ஒப்பந்தம் ஏற்கனவே இரு தரப்பு வர்த்தக அமைச்சு செயலாளர்களால் கடந்த ஜூலை மாதத்தில் ஒப்பமிடப்பட்டுள்ளது. உயர்மட்டத்தில் கையெழுத்தி டுவதற்கு அப்படி ஒன்றும் நேரம் போய் விடமாட்டாது என்று கூறினார் பெயர் வெளியிட விரும்பாத இந்திய அதிகாரி ஒருவர்.

இந்தியாவில் தமிழ் நாடு அரசியலில் இலங்கை பற்றிய நிலைப்பாடு மிகுந்த தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

புலிகளின் ஆதரவாளராகக் கருதப்படும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு முன்னணியிலிருந்து விலகியதையடுத்து மத்திய அரசு தமிழ் நாட்டில் புலிகள் ஆதரவு விடயத்தில் ஒரு சமநிலை ஆதரவுப் போக்கைப் பின்பற்றத் தொடங்கியது. அதே வேளை கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையிலிருந்து வரிசை வரிசையாக அகதிகள் தமிழ் நாட்டில் வந்து சேரத் தொடங்கியுள்ளார்கள். 2006ஆம் ஆண்டில் மாத்திரம் 16 ஆயிரம் இலங்கை அகதிகள் தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளார்கள் என்று இந்திய உள்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் ராஜபக்ஷ அரசு புலிகளுக்கு எதிரான போரில் வெற்றியடையவும் கிழக்கிலங்கையில் தேர்தல்களை நடத்தவும் தொடங்கியதையடுத்து இந்தியாவுக்கு அகதிகள் வருவது வருடத்தில் 2 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

கிழக்கிலங்கையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி எஸ்.சந்திரகாந்தன் தலைமையில் வெற்றி பெற்றுள்ளது

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு புலிகள் ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது.

சார்க் மாநாடு நடைபெறவிருந்த கடைசி நேரத்தில் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர் எம்.கே.நாராயணன் தமிழ்நாடு முதல்வர் எம்.கருணாநிதியை புதுடில்லியில் சந்தித்து அகதிகள், மீனவர்கள் மற்றும் கச்சதீவு விவகாரம் போன்ற விஷயங்கள் தொடர்பாக விவாதித்துள்ளார் என்பதை புதுடில்லியில் பிரதம மந்திரியின் அலுவலக அதிகாரி ஒருவர் ஊர்ஜிதம் செய்தார்.

அதே சமயம் தமிழ்நாடு பொலிசார், தம்பிஅண்ணா போன்ற புலிகள் ஆதரவாளர்களைக் காவலில் வைக்கத் தொடங்கியுள்ளார்கள் என்று உள்துறை அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்நாட்டில் புலிகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு கடும் போக்கை கடைப்பிடிப்பது புலிகளை எதிர்க்கும் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பது இந்திய மத்திய அரசுக்கு வசதியாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

## சீன, பாக். ரடார்நிலைகளை மாற்றி அமைக்க ராஜபக்ஷ சம்மதம்

ஆகவேதான் கடந்த ஜூன் மாதம் இலங்கைக்குச் சென்ற இந்திய உயர்மட்ட அரசியல் குழுவினர் (பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவு செயலாளர் சிவ்சங்கர்மேனன், பாதுகாப்பு செயலர் விஜேசிங்) இலங்கைக்கு உயிர் ஆபத்து அற்ற ஆயுதங்களைத் தந்து உதவத் தயாராய் இருக்கிறது. இதற்கு மாற்றீடாக அரசியல் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் இலங்கைத் தமிழர்களுடன் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலை ஏற்படுத்தும் வகையில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று வற்புறுத்தியது.

### பாக்., சீனாவுக்கான வசதிகளை மாற்ற சம்மதம்

ராடர்கள், இரவில் பார்க்கும் சாதனங்கள் மற்றும் கனரக வாகனங்களான உயிர் அச்சுறுத்தலற்ற பொருள்கள் போக 800 இலங்கை அதிகாரிகளுக்கு இந்தியா பயிற்சியும் அளித்துள்ளது என்று பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறினார். எனவே ராஜபக்ஷ அரசுக்கு பொருளாதார ரீதியிலும் அரசியல் மட்டத்திலும் இவ்வாறு இந்தியா உதவ முன் வந்துள்ளதையடுத்து இந்தியாவுக்கு மனச் சங்கடங்களைக் கொடுப்பதாக இருக்கும். பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுக்கு வழங்கப்படும் வசதிகளை மாற்றி அமைப்பதற்கு ராஜபக்ஷ இணங்கியுள்ளார்.

இதுபற்றி தென் ஆசிய ராஜதந் திரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தப் பிரதேசத்தில் சீனாவின் இருப்பு ஒரு யதார்த்த நிலையாகும். இலங்கை அரசு சீனாவையும் பாகிஸ்தானையும் இந்திய நிலைகளைக் கண்காணிக்கக் கூடியதான இடங்களில் அவர்களின் சாதனங்களை நிலைநாட்ட அனுமதியளிக்குமானால் (தமிழ் நாட்டில் கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் அணு சக்தி நிலையங்கள்) இந்தியா நிச்சயமாக எதிர்க்கவே செய்யும்.

ஜவஹர்லால் பல்கலைக் கழகத்தின் சர்வதேச கற்கைக் கல்லூரியில் இலங்கை பற்றிய ஆய்வாளரான பேராசிரியர் பி.சகாதேவன் கூறுகிறார்:

''கொழும்புக்கும் புதுடில்லிக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் யாவும் நிலை பெறாத நிலையில், ராஜபக்ஷ அரசாங்கத்தை இலங்கைத் தமிழர்களுடன் உண்மையான அதிகாரப் பரவல் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளும் படி இலங்கை அரசை வற்புறுத்த இந்தியா மறுத்துள்ளது. 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வற்புறுத்துவதானது 20 வருடம் பிந்திவிட்ட பழைய விடயமாகும். அதற்கும் அப்பால் இப்போது விடயங்கள் நகர்ந்துவிட்டன. இலங்கை அரசமைப்பை மறுசீரமைக்குமாறுதான் இந்தியா இப்போது கோர வேண்டும் பிராந்திய சபைகளுக்கு உண்மையான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்'' என்றார்.

**'லைவ்மின்ட்' பொருளாதார சஞ்சிகையில் ஜோதிமல்ஹோத்ரா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்**

### ராஜபக்ஷ தந்திரசாலி

சகாதேவன் மேலும் கூறுகையில், ராஜபக்ஷ தந்திரபுத்தியுள்ள மனிதர். பிரேமதாஸ, ஜயவர்த்தன இருவரது தந்திரங்களும் கொண்டவர். 1987இல் இந்திய அமைதிப் படையை ஜயவர்த்தன இலங்கைக்கு வரும்படி அழைத்தார். அவருக்குப் பின் வந்த பிரேமதாஸ அவர்களைத் திருப்பி அனுப்பினார். ராஜபக்ஷ இராணுவத் தீர்வை முன்வைக்கிறார். அரசியல் அதிகாரப் பகிர்வு எதையும் நிபந்தனையாக முன்வைக்காமல் புலிகளை அழிக்கப் பார்க்கிறார் - என்கிறார்.

### எல்லாமே இரகசியம்!

இந்தியா என்ன செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே முடியாமல் இருக்கிறது என்கிறார். பத்திரிகையாளரான எம்.ஆர்.நாராணயசாமி, எல்லாமே இரகசியமாக நடைபெறுகின்றன - அமெரிக்கா, பிரிட்டன் போன்று இல்லாமல் என்கிறார்.

இலங்கை விடயத்தில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளும் அவர், ராஜதந்திர செயற்பாட்டில் இரகசியமும் ஓர் ஆயுதமாக இருக்குமோவென்று வியப்பை வெளியிடுகின்றார் அவர். (ப)

### சுனாமி பாதித்த நாடுகளில்

## ஐ.நா.உணவுத்திட்ட அமைப்பு தம் பணிகளைக் கைவிடுகிறது

*அமெரிக்க செஞ்சிலுவைப் பணி தொடரும்*

வாஷிங்டன், ஓக.13

அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்துடன் கடந்த மூன்று ஆண்டுகளாக நெருங்கி இணைந்து செயல்பட்டு வந்த ஐ.நாவின் உலக உணவுத் திட்டம் தனது உணவு மற்றும் உதவித் திட்ட ஆதரவுகளை நிறுத்திக் கொண்டுள்ளது. இந்தோனிஷியாவில் சுனாமித்திட்ட உதவிகளை உலக உணவுத் திட்ட அமைப்பு ஆசே மாகாண அமைச்சிடம் ஒப்படைத்துவிட்டு இத்திட்டத்தின் தனக்குள்ளதொடர்புகளை துண்டித்துக் கொண்டு விட்டது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தங்களையடுத்து இந்தோனேஷியா, சிறிலங்கா மற்றும் மாலைதீவுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டது. உலக உணவுத்திட்ட அமைப்புடன் எமக்கு ஏற்பட்ட இணைப்பு இந்தத் தேவையை நிவர்த்தி செய்ய உதவுவதாக இருந்தது. ஆனால் சுனாமியால் பாதித்த மக்களுக்கு உணவு, போஷாக்கு, கல்வி போன்ற துறைகளில் உடனடித் தேவைகளை கவனிக்க முடிந்தது என்று கூறினார். அமெரிக்க செஞ்சிலுவைச்சங்கத்தின் சுனாமி மீள் நிர்மாணப் பணிப்பாளர் ஜெரால்ட் அன்டர்சன்.

இலங்கை, இந்தோனிஷியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் பாதிக்கப் பட்ட சுனாமி பாதிப்பளாருக்கு உதவவென அமெரிக்க செஞ்சிலுவைச்சங்கம் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக உலக உணவுத்திட்ட அமைப்புக்கு வழங்கியிருந்தது.

உலக உணவுத்திட்டம் தனது உணவு வழங்கும் திட்டத்தை சம்பந்தப்பட்ட அரசுகளிடமே கையளிப்பதனால்அந்த அரசுகளின் அதிகாரிகளுக்கு இத்திட்டத்தைக் கையாள்வது தொடர்பாக பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலை பாதித்த பகுதி மக்களின் மீள் வாழ்வளிப்பு நடவடிக்கைகளில் அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் 2010 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து ஈடுபட்டுவரும். அவர்கள் முழுமையாக நன்நிலைக்குத் திரும்பும் வரை தண்ணீர் விநியோகம் மற்றும் சுகவாழ்வு பராமரிப்புப் பணிகளை தொடர்ந்து பேணுவதற்கு அமெரிக்க செஞ்சிலுவைச்சங்கம் கடமைப்பட்டிருக்கிறது என்று அந்த நிறுவனம் கூறியுள்ளது. (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 30 | 14.08.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | பி.இ. 01.44 வரை |
| நட்சத்திரம் : | பூராடம் |
| | மு.ப. 11.29 வரை |
| சுபநேரம் : | 07.35 - 09.05 |
| ராகுகாலம் : | 01.35 - 03.05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலாசனம் விளைவித்த துர்அதிஷ்டம்

ஷாஜஹான் மன்னரின் பொக்கிஷத்தில் பெருமளவு செல்வம் சேர்ந்துவிட்டது. கட்டிகட்டியாகத் தங்கம், வெள்ளி என்பவை நிரம்பி வழிந்தன. வைரம், மரகதம், நீலம், இரத்தினம் என ஏராளமாகக் குவிந்துவிட்டன. இவை இப்படிக் கணக்கற்றுக் குவிந்து கிடப்பதால் மட்டும் அர்த்தமில்லையே. அவற்றை என்ன செய்யலாம் என மன்னர் தனது மூளையைப் பிசைந்தார்.

அவருக்கு ஓர் எண்ணம் உதித்தது. அவற்றைப் பயன்படுத்தி தனக்கு ஒரு சிம்மாசனம் செய்யத் திட்ட மிட்டார். அதுவும் மயிலாசனம் செய்யத் திட்டமிட்டார். மாமன்னர் திட்டமிட்டால் அதற்கும் மறுப்புண்டா.

தங்கத்தில் மயிலாசனம் வார்த்து விலையுயர்ந்த கற்கள் அனைத்தும் பதிக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. அந்த ஆசனம் அப்படியே கண்ணைப் பறித்தது. இந்த மயிலாசனத்தில் அமர்ந்துதான் ஷாஜஹான் மன்னர் ராஜ்ஜியம் செய்து வந்தார்.

அப்படி மிகவும் ஆசையுடன் வார்த்த மயிலாசனத்தில் அதிக ஆண்டுகள் அமர்ந்து அவரால் ஆட்சி நடத்த முடியவில்லை. அவரது அன்பு மகன் ஔரங்க சீப்பே அவரை சிறையிலடைத்தான். அவர் கூட நீண்டகாலம் ஆட்சியில் அமரவில்லையே.

1737ஆம் ஆண்டு நாதிர்ஷா டில்லிமீது படையெடுத்து அரசைக் கைப்பற்றினான். முதல் வேலையாக அந்த மயிலாசனத்தை பாரசீகத்திற்கு எடுத்துச் சென்றான்.

அங்கிருந்தவர்கள் சும்மா விடுவார்களா? அந்த மயிலாசனத்திலிருந்த விலை மதிப்பற்ற கற்களைக் கொள்ளை யடித்தனர். நாதிர்ஷா ஆட்சியும் சில ஆண்டுகளிலேயே முடிவுற்றது.

18ஆம் நூற்றாண்டில் ஆகாமுகமதுஷா மன்னன் அந்த சிம்மாசனத்தில் களவுபோன கற்கள் இருந்த இடத் தில் புதிய கற்களைப் பதித்து அதைச் சிம்மாசனமாக்கினார். அதன் பின்னர் அந்த ஷா வம்சமும் அதிக காலமும் ஆட்சியில் அமரவில்லை.

தற்போது ஈரான் என அழைக்கப்படும் பாரசீகத்தில் அண்மையில் பல்வேறு உள்நாட்டு சிக்கல்கள் இடம் பெற்று வந்தது அனைவரும் அறிந்ததே.

அந்த மயிலாசனத்தை யார் யார் வைத்திருந்தார்களோ அவர்களையெல்லாம் அது துடைத்தெறிந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

சந்தோசன், குப்பிளான்.

## கேள்வி

பெண்ணே!
உனக்கான கடிதத்தை
இன்னமும் நான்
எழுதவே இல்லை
அதற்கு முன்னே ஏன்
என் கண்ணீர் அஞ்சலிக்காய்
கவிதை எழுதினாய்.

## சுயம்வரம்

ஒரு பெண்ணின்
சுயம்வரத்துக்காய்
சென்றேன் - அவள் என்
முதல் காதலி என்பது
தெரியாமல்
கண்ணீரோடு திரும்பி
வருகிறேன்
அவள்
விதவை என்பது தெரிந்து
கொண்டதால்.

செ.மோகன்ராஜ்,
நெடுந்தீவு - 12

## நீலக்கம்பளம் விரித்தாற் போல்

'எங்கும் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று மெத்தென்ற பசும்புல் தரை' இப்படி எத்தனையோ கதைகளிலும் இலக்கியக் கட்டுரைகளிலும் வாசித்திருப்போம்.

ஆனால் இதே சொற்றொடரை அமெரிக்காவின் கென்டகி மாநிலத்தில் உள்ள எவரும் தம் பிரதேசத்தைப் பற்றி எழுதிவிட முடியாது. எழுதினால் அங்குள்ளவர்கள் சிரிப்பார்கள்.

ஏன் தெரியுமா அங்குள்ள புல்லின் நிறம் நீலம். மண் நீலநிறமாக இருப்பதால் புல்லும் நீலநிறமாகவே வளருகின்றதாம்.

புதன் பொய்கை

## சாதிக்காய்

சாதிக்காய் பண்டைய காலத்திலிருந்தே மருந்தாகவும் வாசனைத் திரவியமாகவும் தாம்பூலப் பொருளாகவும் பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

சாதிக்காய் பற்றிக் கொஞ்சம் அறிந்துகொள்வோமா?

சுதர்சினி
உடுப்பிட்டி.



## பயன்தரும் காய்

ஒரு மரத்தின் காய்க்குள் இருக்கும் பருப்பே சாதிக்காய். இந்த சாதிக்காய் மரம் 50 முதல் 60 அடி உயரம் வரை வளரக் கூடியது. 'பரிஸ்டிக்கேசி' என்னும் மரக் குடும்பத்தைச் சேர்ந்த இது இரட்டை விதையிலைத் தாவரங்களில் ஒன்று. இது இலையுதிரா மரவகை. இதனால் இது என்றும் பசுமையாகவே காணப் படும்.

சிங்கப்பூர், பினாங்கு, வங்காளம், மேற்கு தொடர்ச்சிமலை, ரியூனியன், பிரேசில், பிரெஞ்சுகயானா, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய இடங்களிலேயே இது அதிகளவில் பயிர்செய்யப்படுகின்றது.

மெலுக்கா தீவில் மிக அதிகளவில் காணப்படுகின்றது.

# காபினெற் என்றால் என்ன?

காபினெற் (Cabinet) என்றால் பொதுவாக ஒரு நாட்டின் அமைச்சரவையையே குறிப்பதாக இருக்கும். (இச்சொல்லுக்கு வேறு கருத்துக்களும் உண்டு)

இந்த காபினெற் அமைச்சரவை முதன் முதல் இங்கிலாந்திலேயே பழக்கத்துக்கு வந்தது.

பிரிட்டனில் மக்கள் சபையான காமன்ஸ் சபையில் ஒரு விடயம் தொடர்பான விவாதம் தொடங்கப்போகிறதென்றால் சபையின் – சபாநாயகருக்கு வலதுபுறமாக அமர்ந்துள்ள பிரமுகர்கள் குழுவின் மீதே எல்லோரது கவனமும் திருப்பப்படும். சபையின் பெரும்பான்மைக் கட்சியின் தலைவர்களான இக்குழுவினரே பதவியிலுள்ள அரசின் கொள்கைகளை முன்மொழிவார்கள். 'காபினெற்' என்பதை வால்ரர் பாகெஹொற் என்பவர் ''சட்டமாக்கல் மற்றும் நிறைவேற்றல் பிரிவுகளை ஒன்றாக இணைக்கும் அமைப்பு'' என விளக்கப்படுத்தியுள்ளார். சுருக்கமாகச் சொல்வதானால் காபினெற் ஆனது அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் முன் மொழிவுகளுக்கு கூட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் முதல் அமைச்சரையும் அமைச்சர் குழுவையும் கொண்டதாக இருக்கும். உண்மையில் அரசாங்கத்தை வழிநடத்தும் குழுவே அது. 1937ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரிட்டிஷ் சட்டத்தின்படி ஓர் அமைச்சரவையில் 17 அமைச்சர்களே இருப்பார்கள். இவர்களில் 15 பேருக்கு மேற்பட்டவர்கள் காமன்ஸ் சபையைச் சேர்ந்தவர்களாய் இருப்பர். இந் த எண்ணிக்கை அவ்வப்போது மாறினாலும் கொள்கை அவ்வாறே பின்பற்றப்படுகின்றது.

அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றே மகாராணி எதையும் செய்வார். பெயரளவிலேயே மகாராணி - அதிகாரங்கள் பெரும்பாலும் அமைச்சரவையிடமே உள்ளன. பிரிட்டனிலுள்ள பொறுப்பு வாய்ந்த அமைச்சரவையுடன் கூடிய அரசு முறையானது கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றது.

★★★★★★★★★★★ராம்.

## மயிரிழையின் அளவு

'மயிரிழை' யில் உயிர் தப்பினார் என்கிறார்களே. அந்த மயிரிழை என்பது என்ன அளவு?

ஓர் அங்குலத்தின் ஐம்பதில் ஒரு பாகமே ஒரு மயிரிழை.

## முதல் தடவையே உண்மை

நாட்டின் பொறுப்புமிக்க பதவியொன்றில் இருப்பவர் எத்தனை ஆயிரம் பேரை எத்தனையோ காரியங்களுக்காகச் சந்தித்திருப்பார்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற சபாநாயகர் ரேபார்னை ஒருவர் சந்தித்தார். சபாநாயகரிடம் அவர் நீங்கள் தினமும் நூற்றுக்கணக்கானவர்களை சந்தித்திருப்பீர்கள். அவர்களிடம் 'ச?' அல்லது 'இல்லை' என்ற வார்த்தை எத்தனையோ தடவை கூறியிருப்பீர்கள். அதனை கள் குறித்து வைத்ததுமில்லை. ஆனால் நீங்கள் சொன்னதை மறந்ததாக யாருமே குற்றம் சாட்டியதில்லையே எப்படி? என்று கேட்டார்.

அதற்கு அவர் 'அதில் ஒரு சிரமமுல்லை. முதல் தடவையே உண்மையைச் சொன்னோமானால் அதனை நினைவு வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லையல்லவா? என்று பதிலளித்தார்.

தீபனா, பாஷையூர்.



விமானம் தோன்றுவதற்கு முன்னரே வானில் பறக்க விரும்பிய மனிதன் அதற்காக உருவாக்கியதுதான் பரசூட். 1495ஆம் ஆண்டு இத்தாலியைச் சேர்ந்த விஞ்ஞானியான லியர்னாடாவின்சி மனிதன் வானவெளியில் உள்ள காற்று மண்டலத்தில் பறக்கமுடியும் என்னும் கொள்கையை வகுத்து ஒரு திட்டத்தைத் தந்தார்.

அவரது கொள்கையைப் பயன்படுத்தி, 1595ஆம் ஆண்டு இத்தாலியைச் சேர்ந்த பாஸ்டோ வெரான் ஸோவியா என்பவர் பரசூட் மூலம் வானத்தில் பறந்து பார்க்க ஆசைப்பட்டார். உயரமான இடத்திலிருந்து குதித்த அவர் பரசூட்டின் உதவியால் மெல்ல இறங்கினார். ஆண்ட்ரே கார்னரின் என்னும் பிரெஞ்சுக்காரர் 1797ஆம் ஆண்டு குடையின் அமைப்பில் பரசூட்டைத் தயாரித்தார். பலூன்கள் மூலம் வானத்தில் முதலில் பறந்தவரும் இந்த கார்னரின்தான்.

பலூன் மூலம் பிரான்சின் பரிஸ் நகரின் மேலால் வானத்தில் பறந்தவர் அதிலிருந்து குதித்து தாம் தயாரித்த பரசூட் மூலம் கீழிறங்கினார்.

விமானத்திலிருந்து பரசூட் மூலம் குதித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஆல்பெர்ட் பெர்ரி. இது நடந்தது 1912ஆம் ஆண்டு.

இப்போது பரசூட்டின் மூலம் குதித்தல் என்பது சர்வசாதாரணமாகி விட்டது. பரசூட்டில் பறந்தபடி திருமணம் செய்த புதுமை விரும்பிகள் கூட உண்டு.

## வானில் பறப்போம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்னல்

மேகங்களுக்குள் நிலவுபோல்
தினம் சோகங்களுக்குள் நான்
தினம் வந்த வேதனைகள்
சோதரர் தந்த சோதனைகள்

கோடி கோடி புண்ணியம் செயினும்
தேடித் தேடி பழிகள் வரும்
வாடி வாடி வருந்திய போதும்
வாழ்க்கைச் சோலை துளிர்கிறது
ஆனால்
நம் வாழ்க்கைச் சோலையில்
பொன் வசந்தம் வீச மறுக்கின்றது
அவளால் வசந்தம் வீசிய போதும்
மின்னலாய் மறைந்து போகிறது

இருட்டினில் வாழும் உயிர்களுக்கு
அந்த இறைவன் தானே கை விளக்கு
விடிந்த பின்னால் விளக்கெதற்கு
எல்லாம் முடிந்த பின்னர் அவள்
முடிவதற்கு.

ம.மோனன், கொற்றாவத்தை.

★★★★★★★★★★★★★★★★

## கலண்டர்

மனித வாழ்வின்
நாள்களை
கணக்கிடும்
காலனின்
கல்குலேட்டர்.

★★★★★★★★★★★★★★★★★

## மயானம்

உயிரோட்டம் இருந்தபோது
ஒன்று சேரா மனிதரெல்லாம்
உயிர்மூச்சு ஓய்ந்த பின்னே
வந்து கூடும் ஒன்றியம்.

விநாயகன் டினேஸ்கரன்
நெடியகாடு, வல்வெட்டித்துறை.

# ஐ.நா. படைகளின் தலையீட்டை கோருகின்றது ஜோர்ஜியா

லண்டன், ஓக.13

''ரஷ்யாவுடனான சண்டையை நிறுத்துவதற்காக, ஐ.நா. அமைதிகாக்கும் படையின் தலையீடு அவசியம்'' என, லண்டனிலுள்ள ஜோர்ஜிய தூதரகப் பதில் தலைவர் ஜியோர்கி பெட்ரிட்ஜ், ரொய்டர் செய்திச் சேவைக்குத் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''அறிக்கைகளாலும், நன்நோக்கோடு கூடிய கருத்துரைகளாலும் பயன் விளையப் போவதில்லை. தாக்கமான- காத்திரமான நடவடிக்கைகளையே நாம் நம்புகிறோம்; எதிர்ப்பார்க்கின்றோம்;'' என்றும் அவர் தம் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பிரிந்து போன தென் ஒஷிடியாவுக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையிலான பிணக்கைத் தீர்க்க, எத்தகைய உதவியை ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து, ஜோர்ஜியா எதிர் பார்க்கிறது என அவரிடம் வினாவொன்று தொடுக்கப்பட்டுள்ளது.

அதற்கவர் விடையளிக்கையில், ''எங்களுக்கு தரைப் படைகளே தேவை. அது ஐ.நா. தலைமையிலான சர்வதேச படையாகவே இருக்க வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அது திருப்தியளிக்கலாம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''ஐ.நா.அமைதிகாக்கும் படை ஜோர்ஜியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான எல்லையில் நிலைகொண்டிருக்க வேண்டும். ஜோர்ஜியாவின் எல்லையிலிருந்து, ரஷ்ய துருப்புகள் துரத்தியடிக்கப் பட வேண்டும்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

## இந்திய-பாகிஸ்தான் மோதல்

புதுடில்லி, ஓக. 13

எல்லைக் கோட்டுப் பகுதியில் இந்திய இராணுவ நிலைகள் மீது நேற்று முன்தினம் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். பதிலுக்குத் இந்திய இராணுவத்தினரும் திருப்பித்தாக்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இந்தியத் தரப்பில் எந்த சேதமும் ஏற்படவில்லை. இத்தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியாதிருப்பித்தாக்கியது. இத்தகவலை இந்திய இராணுவ செய்தித் தொடர்பாளர் ஏ. கே. மத்தூர் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் மட்டும் 22ஆவது தடவையாக பாகிஸ்தான் போர் நிறுத்தத்தை மீறியுள்ளதுஎன்றும் அவர் தெரிவித்தார்.

# ஜோர்ஜியா மீதான தாக்குதலை நிறுத்த ரஷ்யாவிடம் அமெ. மீண்டும் வலியுறுத்து

டிபிலிஸி, ஓக. 13

ரஷ்ய ஆயுதப்படைகள் நேற்று செவ்வாய்க்கிழமை, ஜோர்ஜியாவில் பல இடங்களில் நிலை கொண்டன. இராணுவ நடவடிக்கையைக் கைவிடுமாறு, அமெரிக்கா விடுத்த கோரிக்கையை ரஷ்யா தட்டிக் கழித்து விட்டது. அதேவேளை ஜோர்ஜியாவின் யுத்த நிறுத்தப் பிரகடனத்தையும் அது நிராகரித்து விட்டது என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

சண்டையை நிறுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், ரஷ்யாவை மீண்டும் கோரியுள்ளார். அத்துடன் ஜோர்ஜியாவின் தலைமைத்துவத்தைக் கவிழ்ப்பதற்கு ரஷ்யா முனைந்துள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இதனை ரஷ்யா அலட்சியப்படுத்தியுள் ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள் ளார்கள்.

அதேவேளை இவ்விவகாரம் தொடர்பாக ரஷ்யா பிரதமர் விளாடிமீர் புடின் அமெரிக்காவைச் சாடியுள்ளார். ஜோர்ஜியர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள், வஞ்சிக்கப்படுகிறார்கள் என அமெரிக்கா ஆத்திர மேலீட்டால் கூக்குரலிடுகிறது. ஆனால் அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதை அது ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களைக் கண்டிக்கவுமில்லை என புடின் குறிப்பிட்டுள்ளார்.

தென் ஒஷிட்டியா ரஷ்யாவிலிருந்து பிரிந்த ஒரு பிராந்தியமாகும். எனினும் ரஷ்யாவுக்கு ஆதரவானது. இதனை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, கடந்த வாரம் ஜோர்ஜியா முன்வந்தது. அதனால் இராணுவ ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. இதனையடுத்தே ஜோர்ஜியாவுக்கும், ரஷ்யாவுக்குமிடையே, நேரடி மோதல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், வாஷிங்டனில் இவ்விவகாரம் குறித்து, திங்கட்கிழமை உரையாற்றுகையில், ''ஜோர்ஜிய ஜனாதிபதி மக்கெயில் ஷாகாஷ்விலியின் தெரிவு செய்யப்பட்ட அரசைக் கவிழ்க்க ரஷ்யா தலைப்பட்டுள்ளது'' என குற்றஞ்சாட்டினார். அத்துடன் ரஷ்யாவையும் வெகுவாகக் கண்டித்தார்.

# பாக். விமானப்படை பஸ் மீது குண்டுத் தாக்குதல்; 13 பேர் பலி!

இஸ்லாமாபாத், ஓக.13

பாகிஸ்தானின் வட-மேற்கு நகரான பெஷாவாருக்கருகில், நேற்று செவ்வாய்க்கிழமை, பாகிஸ்தான் விமானப்படை பஸ்ஸொன்று குண்டுத்தாக்குதலுக்கு இலக்கானது. இதில் 13 பேர் கொல்லப்பட்டனர். 10 பேர் காயமடைந்தனர். குண்டுத் தாக்குதலில் பஸ் முழுமையாக நிர்மூலமாக்கப் பட்டுவிட்டது என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பெஷாவார் நகரின் புறநகர்ப்பகுதியிலுள்ள படாபர் என்னுமிடத்துக்கருகில், இப்பஸ் பாலமொன்றின் மீது சென்று கொண்டிருந்தது போது, குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. பயணிகள் மத்தியில் சிவிலியன்களும் இருந்தார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இக்குண்டு தன்னியக்க கருவி மூலமாக வெடிக்க வைக்கப் பட்டிருக்க லாம். இது தற்கொலைக் குண்டுத் தாக்கு தல் அல்ல வென, வட மேற்கு முனை மாகாண பிரதம பொலிஸ் அதிகாரி மாலிக் நவீட் கான் ஊடகவியலாளருக்குத் தெரிவித்தார்.

# இந்தோனேஷியாவில் 2 முறை நிலநடுக்கம்; வீடுகள் குலுங்கின; ஆழிப்பேரலைப் பீதி

ஜகார்த்தா, ஓக.13

இந்தோனேஷியாவின் கிழக்கு மாகாணமான கிரியானில் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை திடீர் நில நடுக்கம் ஏற்பட்டது. இந்நில நடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.5 புள்ளிகளாப் பதிவானது. இதில் வீடுகள் குலுங்கின. வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள்.

வீடுகளுக்குள் செல்ல அஞ்சி மக்கள் வெட்ட வெளியிலேயே தங்கினார்கள். இந்த நிலநடுக்கம் ஏற்பட்டு 3 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மாலுகு மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்சடர் அளவு கோலில் 5.2 புள்ளிகளாக பதிவானது. இதிலும் கட்டடங்கள் பயங்கரமாகக் குலுங்கின.

சுனாமி ஏற்படுமோ என்ற பீதியில் பொதுமக்கள் மேடான பகுதிகளை நோக்கி ஓடினார்கள். இந் நில நடுக்கத்தால் சில வீடுகள் சேதமடைந்தன. சேத விவரங்கள் உடனடியாக வெளியாக வில்லை.

இந்தோனேஷியா புவித் தட்டுக்கள் நகர்ந்து ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளும் பகுதியில் இருப்பதால் அங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட நில நடுக்கம் மற்றும் சுனாமியால் 2 லட்சத்துக்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

(சி)

# ராஜீவ் கொலைக் கைதிகளான நளினி உட்பட மூவரின் வழக்குகள் ஒன்றாக விசாரணைக்கு

சென்னை, ஓக.13

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் தம்மை முன் கூட்டியே விடுதலைச் செய்யக் கோரி நளினி, ரோபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகிய மூவ ரும் தாக்கல் செய்த வழக்குகள் தனித்தனி யாக அல்லாது ஒன்றாக விசாரிக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றில் நளினியின் சட்டத்தரணி கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாக வேலூர் பெண்கள் சிறப்புச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் நளினி. 17 ஆண்டுகளாக சிறையிலுள்ள தால் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி 2006, மற்றும் 2007இல் தனித்தனியாக மனு செய்தார். இம்மனுக் கள் ஆலோசனைக்குழுவால் தள்ளுபடி செய்யப்பட்டன.

அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் நளினி வழக்குத் தொடர்ந்துள்ளார். இதே போல் ராஜீவ் கொலையில் ஆயுள் கைதிகளாக வேலூர் மத்தியில் சிறையிலிருக்கும் ரோபர்ட் பயார்ஸ், ஜெயக்குமார் ஆகியோரும் தங்களை முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரினர். இவர்களின் மனுக்களையும் ஆலோசனைக்குழு தள்ளுபடி செய்தது. இதனை எதிர்த்து அவர்களும் தனித்தனியாக வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

நளினியின் வழக்கு, நீதிபதி நாகமுத்து முன் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது சட்டத்தரணி மாசிலா மணி ஆஜராகி, 'நளினி, ரோபர்ட் பயாஸ், ஜெயக்குமார் ஆகியோரின் வழக்குகள் தனித்தனியே நீதிமன்றங்களில் உள்ளன. இவ் வழக்குகளை ஒரே நீதிமன்றத்தில் ஒன்றாக நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.' - என்றார். வழக்கை ஓகஸ்ட் 20ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# பணமோசடிக் குற்றச்சாட்டை மறுக்கிறார் பாக். ஜனாதிபதி

இஸ்லாமாபாத், ஓக.13

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்த உதவித் தொகையில், 2800 கோடி ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளது என, மக்கள் கட்சித் தலைவர் ஆஷிப் அல்-சர்தாரியால் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு, ஜனாதிபதி பேர்விஸ் முஷாரப்பால் நிராகரிகப்பட்டு விட்டது.

ஜனாதிபதியின் சார்பில், அவரது செய்தித் தொடர்பாளர் ரஷீக் குரேஷி, இது தொடர்பாக பத்திரிகையொன்றுக்கு பேட்டியளித்துள்ளார். அதில் அவர், ''சர்தாரியின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. அரசியல் பழிவாங்கலை அடிப்படையாகக் கொண்டது. மக்களை ஜனாதிபதிக்கு எதிராக முடுக்கி விடும் ஒரு தந்திரோபாயம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''2001 ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவிடமிருந்து நாம் உதவித் தொகை பெற்று வந்துள்ளோம். கணக்கு விவரங்கள் உண்டு. கணக்குகளை கிரமமாக பதிவு செய்தும், பேணியும் வருகின்றோம். ஒவ்வொரு காசுக்கும் கணக்குண்டு'' என்றும் அவர் விளக்கினார்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை இராஜேஸ்வரி

தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராஜேஸ்வரி 09.08.2008 இல் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2008) புதன் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உருத்திரபூபதி குணசீலன் (மகன்).
தாமோதரம் பிள்ளைவீதி,
சங்கந்தானை, சாவகச்சேரி.

## திருமதி கந்தையா சரஸ்வதி

நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது வேப்பங்குளம், வவுனியாவில் வசிப்பவருமாகிய கந்தையா சரஸ்வதி நேற்று(12.08.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் (இளைப்பாறிய ஓவசியர்) அன்பு மனைவியும் கருணாகரன்(இளைப்பாறிய மின் இணைப்பாளர்-பிறிமா ஆலை), சிவராசா(விரிவுரையாளர்- வர்த்தக முகாமைத்துவபீடம்,யாழ். பல்கலைக்கழகம்), சொர்ணதேவா(S.M. தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா), மனோகரன்(ஜேர்மனி), பாஸ்கரன்(வாசன்-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் V.I.நடராஜா(இளைப்பாறிய எழுதுவினைஞர், C.W.E.), சின்னத்தங்கச்சியம்மா (கல்வியங்காடு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருவருட்கரசி, வேதநாயகி, மஞ்சுளாதேவி(பிரான்ஸ்), சாரதாதேவி ஆகியோரின் மாமியும் திவாகரன்(பிரான்ஸ்), பிரபாகரன், கோபிதா (பிரான்ஸ்), தக்ஷாயினி(இத்தாலி), மாதுர்யா(சீனா), பாரதன், வைஷ்ணவி, டுசா, தர்சி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரவீணா, தீபக், சுபன், பிரணவன், கஜானி, பிரவீன், துவாரகா, ஆர்த்தி ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் தில்லைநாயகி, கிருஷ்ணதாசன், முருகநாயகி, குமரதாசன், தேவநாயகி ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (13.08.2008) புதன் கிழமை வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தட்சணாங்குளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சிவராசா(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். 021 222 6029

இல.7 ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா.
024 5683394


SPECIAL OFFER

விசேட சிறப்புச் சலுகை 50% Special Offer...

அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க டிப்ளோமா கற்கைநெறிகளுக்கான விசேட பிரிவுகள் இம்மாதம் 14 மற்றும் 15ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

- Diploma in Ms Office
- Diploma in Web Design
- Dip in Desktop Publishing
- Dip in Computerised Accounting

Select any Course & pay 3900/= only

Duration : 3 Months

இலவச பாடநூல்கள் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களுக்கான பாடநெறிகள்.

கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்

Certified Computer Accountant

Tally ies 9.0

உலகின் முன்னணி Accounting Software

Duration : 2 Months

A/L மாணவர்கள், HNDA , AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கட்டணச்சலுகை.

ASIAN-CSC COMPUTER EDUCATION

2G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Tel :021 222 5677


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வர்த்தகர் ஒருவர் புத்தலவில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி சென்று கொண்டிருந்த தமிழ் வர்த்தகரொருவர் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி பலியாகிய சம்பவமொன்று கடந்த திங்களன்று புத்தலவில் இடம்பெற்றுள்ளது.

புத்தலவில் வர்த்தக நிலையமொன்றை நடத்தி வருபவரான ஏ. என். சிவகுமார் என்ற 35 வயதுடையவரே இவ்வாறு பலியானார்.

இது பற்றி மேலும் தெரிய வருபவை வருமாறு:-

மேற்படி வர்த்தகர் தமது வர்த்தக நிலையத்தை மூடி விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த போது கம்தாவ என்ற இடத்தில் வெள்ளை வானில் வந்தவர்கள் இவர் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான வர்த்தகர் புத்தல வைத்தியசாலையில் சேர்க் கப்பட்ட போதும் அவரது உயிர் பிரிந்து விட்டது.

இவர் ஏற்கனவே கடத்தப்பட்டு இரண்டு வாரங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டவர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## காங்கேசன்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிமொழிகள் 2004 ஆழிப்பேரலைக்குப் பின்னர் வழங்கப்பட்டபோதிலும் தற்போது மீண்டும் அது புதுப்பிக்கப்பட்டுள்ளமை, விடுதலைப்புலிகளுக்கு எதிரான கொழும்பின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் ஆதரவை புலப்படுத்துகின்றது என்றும் - 'ஹிந் துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகையின் பொரு ளாதார சஞ்சிகையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

'சார்க்' உச்சி மாநாட்டிற்கு சற்று முன்னதாக இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணனுக்கும் தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கும் இடையில் புதுடில்லியில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அதன்போது இலங்கை அகதிகள் விவகாரம் மற்றும் கச்சதீவு விடயம் குறித்து ஆராயப்பட்டதாகவும் இந்திய பிரதமர் அலுவலகத்தை மேற்கோள் காட்டி பத்திரிகை தெரிவித்துள்ளது.

தி. மு. க. தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதற்கு இணங்கியதாகவும், இதனைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் இந்திய உள்துறை அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழக முதலமைச்சரின் இந்த நிலைப்பாடு காரணமாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொழும்பின் இராணுவ நடவடிக்கைக்கு இந்தியாவால் சுலபமாக ஆதரவளிக்க முடிந்ததாக அக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் தமது நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளை விரட்டிக் காட்டுக்குள் தள்ளி விட்டு காத்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களை தேடிக்கண்டு பிடித்து முழுமையாக அழித்தாலேயே சமாதானத்தைக் கொண்டுவர முடியும்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து 6500 கிலோமீற்றர் பிரதேசத்தை 5 ஆயிரமாக படையினர் குறைத்துள்ளனர். அவர்களின் படைப்பலத்தை 13 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரமாகக் குறைத்துள்ளனர்.

அவர்களின் பெரிய கடற்படை முகாமை படையினர் கடந்த வாரம் கைப்பற்றினர். கடந்த வாரம் கிளிநொச்சி மாவட்டத்துக்குள் படையினர் பிரவேசித்துள்ளனர் - என்றார் அவர். (அ-1)

## தமிழரின் ஆதரவு இல்லாததால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு எனது இந்த அறிவுரை குறித்து மகிழ்ச்சியடையாது என்பது எனக்குத் தெரியும். எனினும் நாங்கள் அவர்களுக்குப் போதனை செய்வது குறித்து ஆர்வம் கொண்டிருக்கவில்லை. இதுவே அவர்களுக்கு வழங்கக்கூடிய சிறந்த அறிவுரை - என்றும் எம்.கே.நாராயணன் தெரிவித்துள்ளார்.

### இந்தியாவால் அறிவுரையை சிறப்பாக வழங்க முடியும்

நோர்வே அல்லது வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவால் இந்த அறிவுரையை சிறப்பாக வழங்க முடியுமெனவும் தெரிவித்துள்ள எம்.கே. நாராயணன் "இந்த மக்களை நாங்கள் அறிந்துள்ளோம்; நன்கு புரிந்துகொண் டுள்ளோம். " - என்றும் கூறினார்.

இலங்கை உலகின் ஏனைய பல நாடுகள் அனுபவித்ததைப் போன்ற நிலைமை தனக்கும் உருவாகுவதை விரும்புகின்றதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஈராக் மிகச் சிறந்ததொரு உதார ணம் எனக் குறிப்பிட்டுள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர், அதிகளவான அதிகாரப்பகிர்வு மூலம் தமிழ் மக்களை உங்களது பக்கத்திற்குக் கொண்டு வாருங்கள் என்றே நாங்கள் அவர்களுக்குத் தெரிவிக்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் ஆதரவு இலங்கை அரசிற்கு அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகள் பலவீன மடைந்து விட்டனர். கடந்த காலங்களை விட அவர்கள் அதிகளவான இழப்புகளைச் சந்தித்துள்ளனர் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளுக்குத் தமது அமைப்பிற்கு உறுப்பினர்களைச் சேர்ப்பது கடினமாக மாறியுள்ளது. இதனால் வயதில் குறைந்தவர்கள் இணைக்கப்படுகின்றார்கள். விடுதலைப் புலிகள் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழர்களின் சீற்றத்தை இலங்கை கணக்கெடுக்கவில்லை

மேற்குலகின் தடைகளும் அவர்களைப் பலவீனப்படுத்தியுள்ளன. நிதி சேகரிப்பது, ஆயுதங்களைக் கொண்டு வந்து சேர்ப்பது போன்றவற்றில் பிரச்சினைகளைப் புலிகள் எதிர்கொள்கின்றனர் எனவும் நாராயணன் தெரிவித்தார்.

தமிழ்மக்கள் மத்தியில் காணப்படும் கடும் சீற்றத்தை இலங்கை கணக்கெடுக்கவில்லை. கொழும்பின் பக்கத்தில் பெருமளவு குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்மக்களைப் பொறுத்த வரை அவர்களின் பல்வேறு விடயங்களைத் தீர்மானிப்பதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது என்ற உணர்வை அவர்கள் மத்தியில் இலங்கை அரசு ஏற்படுத்தாத வரை இலங்கை வெற்றி பெறமுடியாது என்பதே எமது வாதம். பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொள்வதற்கான விடுதலைப் புலிகளின் திறனும் குறையவில்லை - என்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறியடிப்புச் சமரில் படைத்தரப்பு இழப்புகளுடன் பின் வாங்கினர் என்றும் - புலிகள் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

அதேசமயம், வன்னிக் களமுனைகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமரில் விடுதலைப் புலிகளில் 24 பேர் உயிரிழந்தனர் என்றும், 19 பேர் படுகாயமடைந்தனர் என்றும் தங்களில் ஆறு பேர் உயிரிழந்தனர் 21 பேர் வரை படுகாய மடைந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

## மேர்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் மேற்கொண்டவர்களை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டும் பொலிஸார் இதுவரை அவர்களைக் கைதுசெய்யவில்லை என்றும், அரசோ அல்லது பொலிஸாரோ இது தொடர்பில் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

காலை 10 மணிக்கு ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டம் ஒரு மணித்தியாலம் வரை இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஆயுதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யபோதே கெஹலிய மேற் கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் கூறியவை வருமாறு:-

புலிகளின் தலைவர் பிரபாகரன் 30 வருடங்களாக இந்த நாட்டை அலைக்கழிக்க வைத்துவிட்டார். அவரால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதங்களும், பொருள்சேதங்களும் மிக அதிகம். அன்று ஆரம்பிக்கப்பட்ட பிரபாகரனின் வெறியாட்டம் இன்னும் அடங்கவில்லை. புலிகள் பலமிழந்த போதெல்லாம் அவர்கள் யுத்த நிறுத்தத்திற்கு வந்து எம்மை முட்டாளாக்கிவிட்டு, அதனூடாகப் பலமடைந்து வந்துள்ளனர்.

### மஹிந்த ராஜபக்ஷவை ஏமாற்ற முடியாது

யுத்தநிறுத்தங்களையெல்லாம் அவர்களாகவே மீறி இந்நாட்டு மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். சர்வதேச நாடுகளையும் ஏமாற்றி வந்துள்ளனர். சர்வதேசத்திற்கு முன்பாக இலங்கையையே குற்றவாளியாக்க முற்பட்டனர்.

30 வருடங்களாக அவர்கள் நடத்தி வந்த இந்த வெறியாட்டம் இப்போது அடங்கி வருகிறது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதி பதியானதும் புலிகள் ஆட்டங்கண்டுவிட்டனர்.

எல்லாத் தலைவர்களையும் ஏமாற்றுவது போல், மஹிந்த ராஜபக்ஷவையும் புலிகள் ஏமாற்ற முயற்சித்தனர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான முதல் புலிகளே படையினர் மீதும், அப்பாவி பொதுமக்கள் மீதும் வலிந்து தாக்குதல் நடத்தினர்.

இறுதியில் அவர்கள் ஜனாதிபதியிடம் வரலாற்றில் என்றுமில்லாதவாறு சிக்கி விட்டனர். புலிகள் முதலில் கிழக்கை இழந்தனர். இப்போது வடக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துகொண்டு வருகின்றனர்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு வெள்ளைக் கொடியுடன் ஜனாதிபதியிடம் சரணடைந்தால் மாத்திரமே எமது யுத்தம் நிறுத்தப்படும். இல்லாதுவிட்டால் யுத்தம் தொடர்வதை நிறுத்தமுடியாது - என்றார். (சி)

# றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் மோதல்

றுகுணு பல்கலைக்கழகத்தின் இரு பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதலில் 12 மாணவர்கள் காயமடைந்தனர்.

பல்கலைக்கழகத்தின் மாணவ அமைப்புகளுக்கு மாணவர்களைப் பதிவுசெய்து கொள்வது தொடர்பாக ஏற்பட்ட முறுகலே இம் மோதலுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

விஞ்ஞானப்பீட, கலைப்பீட மாணவர்கள் மத்தியிலான மோதல் காரணமாக இரண்டு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர். பல்கலைக்கழகத்திற்குள் சிறிய வெடிப்புச் சம்பவமொன்றும் இடம்பெற்றது.

# சோதனைக்காக காத்து நின்றவர் காலில் காயமுற்றார்

யாழ்ப்பாணம், ஒக. 13

பொன்னாலை கடற்படைச் சோதனை நிலையப் பகுதியில் தவறுதலாக துப்பாக்கி வெடித்ததாகக் கூறப்படும் சம்பவத்தில் ஒருவர் காலில் காயமடைந்தார்.

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த க.பத்மசோதிநாதன் (வயது 38) என்பவரே காயடைந்தவராவார்.

யாழ். நகரில் உள்ள தமது தொழில் நிறுவனத்தில் வேலைக்கு வந்த வேளை காயமுற்றவர் சோதனை நிலையத்தில் கடற்படையினரின் வழமையான சோதனைக் காக காத்துநின்ற போதே இச் சம்பவத்தில் சிக்குண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-78)

# தேசிய கல்வி நிறுவக மாணவர்களுக்கு

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிப் பாடநெறி முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கு தோற்றவுள்ள முதலாம் ஆண்டு மாணவர்களையும் முதலாம் ஆண்டுப் பரீட்சைக்கு தோற்றிச் சித்தியடையத் தவறிய மாணவர்களையும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் தன்னைச் சந்தித்து விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கல்வி நிறுவகத்தின் யாழ். பிராந்திய இணைப்பாளர் இ. சத்தியேந்திரம் பிள்ளை கேட்டுள்ளார்.

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஒக. 13

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் 13வது ஆண்டாக நடத்தும் லீக் முறையிலான சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பி.ப 4.30மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* சுதுமலை நாவலர் வி.க. எதிர் மயிலிட்டி நீயூகிற் வி.க. (1-186)

* * *

வலி.வடக்கு, ஒக. 13

வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி வடக்கு ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3.30மணிக்கு ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* மூளாய் வளர்மதி வி.க. 'பி' அணி எதிர் அராலி வானவில் வி.க. 'எ' அணி.
* அராலி சென். ஸ்ரார் வி.க. 'பி' அணி எதிர் இளவாலை யங்கென் றீஸ் வி.க 'எ' அணி. (1-86)


M.A, M.COM, M.BA, M.SC (MATHS), P.G DIPLOMA

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

* பல்கலைக்கழகத்தினால் சித்திரை மாதம் பரீட்சை எடுப்பதற்கான பதிவுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
* பதிவுகள் முடிவுத் திகதி:- 25.08.2008 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
* பரீட்சைகள் யாவும் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

M.A வரலாறு, அரசியல் விஞ்ஞானம், பொருளியியல், பொதுநிர்வாகம், தமிழ், ஆங்கில இலக்கியம், சமூகவியல், சமயமும் தத்துவமும், Journalism & Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்யமுடியும்.

M.Com Banking, Co.Op.Management, Commerce ஆகிய பாடங்கள் ஒன்றினை தெரிவுசெய்யலாம்.

P.G.Diploma ஒருவருட கற்கை நெறியாக பின்வரும் பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்ய முடியும். Journalism & Mass Communication, Management, Marketing Management, Hospital Management, Public Relation Management, School Administration, N.G.O Management,

குறிப்பு:- 2008ஆம் ஆண்டு மார்கழி மாதம் பரீட்சை எடுப்பவர்களுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி 20.08.2008. இதற்கு முன்னர் பரீட்சை விண்ணப்பங்களை காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

யாழ். இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம்(மதுரை)
தொ.பே:- 222 8148, 222 3208.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.



புதிய பிரிவு
A/L - 2010
இந்து நாகரீகம்
S.ஜெயக்குமார் B.A.(Hons)
ஆரம்பம்:- 16.08.2008
காலை- 8 மணி
DMI
ஸ்ரான்லி வீதி யாழ்.



விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
விடுமுறைக்கால புதிய பிரிவு
பொருளியல்
திரு.N.B.சுஜிதரன்
A/L - 2010
அலகு 02- சந்தைப் பொருளாதாரம்
mon, wed. fri (10-11)
A/L - 2009
அலகு 03-தேசிய மதிப்பீடு
அலகு 04- வரவு செலவுத்திட்டம்
mon, wed. fri (9-10)
(புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன)



PAPER CLASS
A/L - 2009
இந்து நாகரீகம்
S. ஜெயக்குமார் B.A.(Hons)
ஆரம்பம்:- 16.08.2008
சனி காலை- 7.15
வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.
DMI
ஸ்ரான்லி வீதி யாழ்.



CHEMISTRY
2009 A/L
PHYSICAL
2010 A/L
THERMO
ஆரம்பமாகின்றது
DIAS Bsc (Hons)
College of Chemistry
Palam Rd,
Kantharmadam.



COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 222 8250, 0777 222422
Diploma in Computerized Accounting
Quick Books + ACCPAC + MYOB
முன்னணி Accounting Software களூடாக
வகுப்புக்கள் ஆரம்பம்.
1. 14/08/2008 - 02.00PM
2. 16/08/2008 - 09.00 AM
3. 17/08/2008 - 09.00 AM
4. 19/08/2008 - 02.00PM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




கல்விப் பொதுத் தராதரப் பத்திர[உயர்தர] முன்னோடிப் பரீட்சை 2008 ஓகஸ்ட்
General Certificate of Education (A/L) Pilot Examination Aguest 2008


# இரசாயனவியல் I

**A.LOGANATHAN** B.Sc. P.G.D.E      யாழ்.மத்திய கல்லூரி.

1) A என்ற மூன்றாம் ஆவர்த்தனத்தில் உள்ள மூலகமொன்று $AO_4^-$ என்ற ஒக்சி அன்னயனைத் தோற்றுவிக்கின்றது. எனின் A ன் இறுதி இலத்திரன் நிலையமைப்பு எது?
1. $3S^2 3P^2$ 2. $3S^2 3P^3$ 3. $3S^2 3P^4$ 4. $3S^2 3P^5$ 5. $2S^2 2P^5$

2) பின்வரும் மூலக்கூறுகளில் எந்த இரண்டும் ஒரே மூலக்கூற்று உருஅமைப்பு உடையவை.
1. $CO_2, SO_2$ 2. $NCl_3, ICl_3$ 3. $SCl_4, CCl_4$ 4. $XeF_4, CF_4$ 5. $H_2O$ , $NO_2$

3) *n = 2 n = 3 ஐதரசன் அணு நிறமாலையின் குறித்த ஒருபகுதி தரப்பட்டுள்ளது. n = 3 , n = 2 என்பன பிரதான சக்தி மட்டங்களைக் குறிக்கின்றன.*





பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்றது
1. கோடு Dன் நிறம் சிவப்பு ஆகும். 2. இங்கே தரப்பட்டிருப்பது பாமர் தொடர் ஆகும்.
3. அம்புக்குறி ( ⟵ )யின் திசையில் சக்தி அதிகரிக்கும்.
4. கோடு C ஐ $H_\beta$ எனவும் குறிக்கப்படும்.
5. தரப்பட்டிருப்பது பாசன் தொடராகும்.

4) பின்வருவனவற்றின் அமில வலிமையை ஏறுவரிசைப்படுத்துக.
a) $CH_3COOH$ b) $CF_3COOH$ c) $HCOOH$ d) $H-C\equiv C-H$
1. a < b < c < d 2. d < b < a < c 3. d < c < a < b
4. d < a < c < b 5. c < a < d < b

5) $K_2SO_4 . Cr_2(SO_4)_3 . 24H_2O$ ஐ நீரில் கரைத்துப் பெறப்பட்ட கரைசல் ஒன்றில் $Cr^{3+}_{aq}$ இன் செறிவு 0.001 mol dm$^{-3}$ ஆகும். எனின் இக்கரைசலில் $SO_4^{2-}$ aq ன் செறிவு ppm ல்
( K = 39 , Cr = 52 , S = 32 , O = 16 )
1. 0.002 2. 0.004
3. கரைசலின் கனவளவு குறிப்பிடாதபடியால் கணிக்க முடியாது.
4. 96 5. 192

6) பின்வரும் ஐதரொட்சைட்டுக்களில் எது காரநிபந்தனையின் கீழ் ஒட்சிசனுடன் மிகவும் இலகுவாக தாக்கம் புரியக்கூடியது?
1. $Co(OH)_2$ 2. $Mn(OH)_2$ 3. $Fe(OH)_3$ 4. $Cu(OH)_2$ 5. $Cr(OH)_3$

7) A B C




தரப்பட்ட A , B , C ஆகிய சேர்வைகளின் நைத்திரேற்றத்தின் கடினத் தன்மையைக் காட்டும் சரியான வரிசை எது?
1. C < A < B 2. A < B < C 3. C < B < A 4. B < A < C 5. A < C < B

8) Al , Cu , Zn , Fe என்பவற்றின் நுண்துளாக்கப்பட்ட கலவையின் மாதிரி ஒன்று தரப்பட்டுள்ளது. இக்கலவையின் குறித்த திணிவை எடுத்து மாணவன் ஒருவன் பின்வரும் செய்கைகள் I , II ஐ மேற்கொண்டான்.
செய்கை I : கலவையின் சிறுபகுதிக்கு dil $H_2SO_4$ ஐ சேர்த்தான்.
சேய்கை II : இந்த அமிலமாக்கிய வடிதிரவத்திற்கு மிகையான NaOH கரைசல் சேர்த்து மாறா திணிவு பெறப்படும் வரை வெப்பமேற்றினான். பின்வருவனவற்றில் சரியானது / சரியானவை
1. செய்கை I ன்மூலம் Cu ன் திணிவு % துணிய முடியும்.
2. செய்கை II ன் மூலம் Fe ன் திணிவு % துணிய முடியும்.
3. செய்கை I ல் Cu கரைந்திருக்காது.
4. செய்கை II ல் Al , Zn கரைந்திருக்கும்.
5. விடைகள் 1 , 2 , 3 , 4 ம் சரியானவை.

9) $BaCl_2 . 4H_2O$ (சார் மூ.கூ.திணிவு = 280) இனதும் $CaCl_2$ இனதும் கலவை ஒன்றின் 0.355g மாதிரி ஒன்று திணிவு மாறாதிருக்கும் வரை 150°C இல் சூடாக்கப்பட்டது. விளைவின் திணிவு 0.319g ஆகும். மாதிரியிலுள்ள $CaCl_2$ இன் திணிவு கிராமில்?
( Ca = 40 , Cl = 35.5 , H = 1 , O = 16 )
1. 0.5 2. 11.1 3. 0.011 4. 0.111 5. 0.172

10) $CaC_2$ ற்கு நீர் சேர்த்து பெறப்படும் Ca ன் சேர்வையுடன் X என்ற தரப்பட்ட உப்பு ஒன்றும் Al தூளும் சேர்த்து வெப்பமேற்றிய போது மட்டும் HCl மூடியுடன் வெண்புகையை கொடுக்கும் வாயு வெளியேறியது. எனவே அந்த உப்பு X ஆனது
1. $Na_2CO_3$ 2. NaCl 3. $NaNO_3$ 4. $NaHCO_3$ 5. $CaCO_3$

11) பின்வரும் ஒட்சைட்டுக்களில் அமில ஒட்சைட் கொண்ட தொகுதி எது?
1. $MnO_2$ , SO 2. $Mn_2O_7, NO_2$ 3. CrO , CaO 4. $Al_2O_3, SO_3$ 5. CaO , $N_2O_5$

12) Ka = 1 × $10^{-6}$ mol dm$^{-3}$ ஆக உள்ள மென்னமிலம் HA இனது 0.01 mol dm$^{-3}$ கரைசலொன்றின் $P^H$ பெறுமானம் ?
1. 6 2. 2 3. 4 4. 3 5. 1

13) உப்பு Xன் மிகவும் ஐதான HCl கரைசல் இளம் சிவப்பு நிறமாகும். இதன் சிறிதளவு கரைசலிற்கு $NH_3$ கரைசல் மிகையாக சேர்த்து நீண்ட நேரத்தின் பின் பார்க்கும் போது கபில நிற கரைசல் அவதானிக்கப்பட்டது. எனவே X ன் கற்றயனும் , கபில நிறத்திற்கு காரணமான சிக்கல் அயனும் முறையே
1. $Mn^{3+}, Mn(OH)_3$ 2. $Mn^{2+}, Mn(OH)_2$ 3. $Co^{2+}, Co(OH)_2$
4. $Co^{3+}, [Co(NH_3)_6]^{3+}$ 5. $Co^{2+}, [Co(NH_3)_6]^{3+}$

14) பின்வருவனவற்றில் எது இருமுனைவுத் திருப்புதிறன் உடையது?
1. $BF_3$ 2. $BeCl_2$ 3. $CHCl_3$ 4. $CCl_4$ 5. $CO_2$

15) பின்வருவனவற்றில் எவை சூடாக்கும் போது $CO_2$ வாயுவைக் கொடுக்கும்?
a) $CaCO_3$ b) $Na_2CO_3$ c) $LiCO_3$ d) $Ag_2CO_3$
1. a யும் b யும் 2. a யும் c யும் 3. b யும் d யும்
4. a , b , c மூன்றும் 5. a , c , d மூன்றும்

16) $N^{3-}$ , O , $F^-$ என்பன தொடர்பாக எது சரியானது?
1. இவை ஒரே $e^n$ நிலையமைப்பை உடையவை.
2. கரு ஏற்றம் $F^- < O < N^{3-}$ ஆக காணப்படும்.
3. யாவும் Ne ன் $e^n$ எண்ணிக்கையை உடையவை.
4. இவற்றின் ஆரையின் ஏறுவரிசை $O < F^- < N^{3-}$ ஆக காணப்படும்.
5. இவற்றின் ஆரையின் ஏறுவரிசை $F^- < O < N^{3-}$ ஆக காணப்படும்.

17) A , B , C ஆகியவை மூன்று கற்றயன்களாகும். இவற்றின்
1. நீர்க்கரைசலின் நிறங்கள் முறையே சிவப்பு , மஞ்சட்கபிலம் , பச்சை
2. இம் மூன்று சல்பைட்டுக்களும் PbS ன் நிறத்தை ஒத்தவை. எனவே A , B , C கற்றயன்கள் முறையே
1. $Co^{2+}, Fe^{2+}, Ni^{2+}$ 2. $Co^{3+}, Fe^{2+}, Ni^{2+}$ 3. $Mn^{2+}, Fe^{3+}, Ni^{4+}$
4. $Co^{2+}, Fe^{3+}, Cu^{2+}$ 5. $Co^{2+}, Fe^{3+}, Ni^{2+}$

18) A , B ஆகிய ஐதரோகாபன்கள் இரண்டும் ஒரே மூலக்கூற்றுச் சூத்திரமுடையவை. இவை இரண்டும் $Hg^{2+}$ / dil $H_2SO_4$ உடன் X எனும் ஒரே விளைவையே கொடுத்தன. A மட்டும் $NH_3 / Cu_2Cl_2$ உடன் சிவப்புநிற வீழ்படிவைக் கொடுத்தது. A , B யில் காபன் இழிவு எண்ணிக்கையில் உண்டு எனின் A , B , X என்பன முறையே
1. $CH_3-C\equiv C-H$ , $CH_3-CH=CH_2$ , $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-CH_3$
2. $CH_3-C\equiv C-H$ , $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-CH_3$ , $CH_3-CH=CH_2$
3. $CH_3-C\equiv C-CH_3$ , $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-CH_2-CH_3$ , $CH_3-CH=CH-CH_3$
4. $CH_3-CH_2-C\equiv C-H$ , $CH_3-C\equiv C-CH_3$ , $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-CH_2-CH_3$
5. $CH_3-C\equiv C-CH_3$ , $CH_3-C\equiv C-H$ , $CH_3-CH_2-\overset{O}{\overset{\|}{C}}-CH_3$


19) தரப்பட்ட தென்னம் வினாகிரியின் அடர்த்தி 0.675 g cm$^{-3}$ . இதன் 20cm$^3$ மாதிரி ஒன்று பொருத்தமான காட்டியொன்றை உபயோகித்து 0.45 mol dm$^{-3}$ NaOH கரைசலுடன் நியமிக்கப்பட்டது. இதன் போது முடிவுப்புள்ளி 15cm$^3$ எனில் இவ் வினாகிரியிலுள்ள ethanoic acid ன் திணிவு சதவீதம் ஆனது
1. 13.5 2. 6 3. 3 4. 6.75 5. 12

20) தரப்பட்ட ஐதரோகாபன் சேர்வை ஒன்று 5-SP$^3$ கலப்புடைய C களையும் 2-SP$^2$ கலப்புடைய C களையும் கொண்டுள்ளது. அத்துடன் இச்சேர்வை ஒளியியல் , கேத்திரகணித சமபகுதியங்களையும் காட்டுகின்றது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் கட்டமைப்பு பின்வருவனவற்றில் எது?
1. $CH_3-CH_2-CH_2-CH_2-CH_2-CH=CH_2$
2. $CH_3-CH=CH-CH_2-CH_2-CH_2-CH_3$
3. $CH_3-CH_2-CH=CH-CH_2-CH_2-CH_3$
4. $CH_3-C(Cl)(CH_2-CH_3)-C(H)=C(H)-CH_3$
5. $CH_3-C(H)(CH_2-CH_3)-CH=CHCH_3$

21) பின்வருவனவற்றுள் எது C = C அமைப்பைக் கொண்டிருக்கும்?
1. பொலித்தீன் 2. PVC 3. பொலிஸ்ரைரீன்
4. இயற்கை இறப்பர் 5. 1 , 2 , 3 இம்மூன்றிலும் C = C உண்டு.

22) a: கார KI கரைசல். b: மாப்பொருள் காட்டி. c: con. $H_2SO_4$ கரைசல் . d: $Na_2S_2O_3$ , e: $Mn(OH)_2$ வழமையான முறையில் நீரில் கரைந்துள்ள $O_2$ ன் சதவீதம் துணியும் பரிசோதனை ஒன்றில் மேலே தரப்பட்டவற்றுள் எவை தேவைப்படும்?
1. a , e 2. a , b , d 3. a , b , d , e 4. a , b , c , d 5. a , b , c , d , e

23) பின்வரும் சேர்வைகளைக் கருதுக.
(a) $CH_3CH_2NH_2$ (b) (c) (d) (e)




இச்சேர்வைகளின் காரவலிமை அதிகரிக்கும் சரியான வரிசையைக் காட்டுகின்றது
1. a < b < c < d < e 2. a < c < b < d < e 3. e < d < b < c < a
4. e < b < d < c < a 5. e < c < d < a < b

24) $C_4H_4O_4$ என்ற A எனும் சேதனச்சேர்வை ஒன்று $H^+ / CH_3OH$ உடன் பரிகரிக்கப்பட்ட போது பெறப்பட்ட பிரதான விளைவின் சார் மூலக்கூற்றுத் திணிவு 132 எனின் A இல் உள்ள காபொட்சிக்கமில OH களின் எண்ணிக்கை
1. 42. 2. 3 3. 2 4. 1 5. 5

25) பின்வரும் தாக்கங்களில் எது ஒரு சமச்சீரான காபன் அணு ஒன்றைக் கொண்ட விளைவைக் கொடுப்பதில்லை.
1. $CH_3COCH_3 \xrightarrow[\text{Con HCl}]{\text{Zn / Hg}}$ 2. அசற்றோன் $\xrightarrow[H_2O]{LiAlH_4}$
3. $CH_3CHO \xrightarrow{\text{NaCN /}}$ 4. $CH_3CHO \xrightarrow[H_2O]{CH_3MgBr}$
5. $CH_3-CH\ CH_3 \xrightarrow[\Delta]{HBr}$

26) X என்னும் பதார்த்தம் நீர் , $CHCl_3$ இரண்டிலும் கரையக்கூடியது. ஒரு முகவையில் 100cm$^3$ நீர் உள்ளது. இதில் X இன் செறிவு A mol dm$^{-3}$ ஆகும். இதற்குள் 10cm$^3$ $CHCl_3$ சேர்த்து கலந்து அதே வெப்பநிலையில் பெறப்பட்ட சமநிலையில் நீர் : $CHCl_3$ படலங்களில் X இன் செறிவுகள் முறையே B mol dm$^{-3}$ , C mol dm$^{-3}$ ஆகும் எனின் A, B , C என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளில் சரியான தொடர்பு எது?
1. 100A = B + C 2. C = A – B 3. 10C = A – B
4. C = 10 ( A – B ) 5. C = 10A – B


27) வினா 26 ல்அதே வெப்பநிலையில் $CHCl_3$ . நீர் இற்கு இடையிலான பங்கீட்டுக் குணகம் 40 எனின் A , B ற்கிடையிலான தொடர்பு பின்வருவனவற்றுள் எது?
1. 40B = A – B 2. A = 5B 3. B = 5A 4. A = 50B
5. A = 3B

28) 50g திணிவுடைய தூய Mg தகடு ஒன்று $CuSO_4$ கரைசலொன்றின் 250cm$^3$ ற்குள் அமிழ்த்தப்பட்டது. குறிப்பிட்ட நேரத்தின் பின்பு தகட்டின் திணிவு 54g ஆகக் காணப்பட்டது. எனின் படிவடைந்த Cu ன் திணிவு கிராமில் (Mg=24, Cu=64)
1. 4 2. 0.4 3. 5.4 4. 6.4 5. 2.4

29) A , B , C , D என்பன உலோகங்களாகும்.
(i) A உம் C உம் மட்டும் ஐ HCl உடன் தாக்கம் புரிந்து $H_2$ ஐ கொடுத்தன.
(ii) B , C , D ஆகியவற்றின் அயன்களைக் கொண்டுள்ள கரைசல் ஒன்றினுள் A ஐச் செலுத்த B, C , D என்பன இடம்பெயர்க்கப்படுகின்றன.
(iii) B ன் அயன் கரைசலிற்குள் D ஐ சேர்க்கும் போது B இடம்பெயர்க்கப்படுகின்றது. இவ் உலோகங்களின் தாழ்த்தும் திறன் குறையும் சரியான வரிசை
1. A > D > C > B 2. A > B > C > D 3. A < C < D < B
4. B > C > A > D 5. A > C > D > B

30) X mol dm$^{-3}$ நீர் HCl கரைசல் ஒன்றின் 70cm$^3$ ஆனது 0.2 mol dm$^{-3}$ நீர் NaOH கரைசல் ஒன்றின் 30cm$^3$ உடன் கலக்கப்பட்டது. இவ்வாறு கிடைக்கும் கரைசலின் $P^H$ பெறுமானம் 2 எனின் X ன் பெறுமானம் mol dm$^{-3}$ இல்
1. 0.3 2. 0.1 3. 0.03 4. 0.2 5. 0.01

31)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் B, D, S, U ற்குப் பொருத்தமானவை

| | B | D | S | U |
|---|---|---|---|---|
| 1. | H–C≡C–H | $CH_2=CH_2$ | செ $H_2SO_4$ | $H^+ / MnO_4^-$ |
| 2. | $CH_2=CH_2$ | $CH_3COOH$ | $H^+ / MnO_4^-$ | $Al_2O_3$ |
| 3. | $CH_3CHO$ | H–C≡C–H | $Hg^{2+}$ / ஐ $H_2SO_4$ | $H^+ / MnO_4^-$ |
| 4. | $CH_2=CH_2$ | H–C≡C–H | $HgCl_2$ / ஐ $H_2SO_4$ | $H^+ / Cr_2O_7^{2-}$ |
| 5. | $CH_3COOH$ | $CH_2=CH_2$ | $Al_2O_3$ ▲ | Cu ▲ |

32) வழமையான முறையில் நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் சதவீதம் துணியும் பரிசோதனை ஒன்றில் 200cm³ நீர் மாதிரி ஒன்று பரிசோதனைக்கு பயன்படுத்தப்பட்டது. நியமிப்பில் 0.01 moldm⁻³ $Na_2S_2O_3$ ன் 20cm³ தேவைப்பட்டது. எனின் இந்நீர் மாதிரியில் ஒட்சிசனின் அளவு ppm ல் யாது?

1. 32  2. 1  3. 8  4. 4  5. 2

33) 
```
C≡C–H           OH
|               |
CH2 – CH=CH – CH – CHO
```
என்னும் சேர்வை பற்றிய கூற்றுக்களில் எது உண்மையானது அன்று?

1. $H^+ / MnO_4^-$ ன் ஊதா நிறத்தை நீக்கும். 2. Na உடன் $H_2$ வாயுவைத் தரும்.
3. $CCl_4 / Br_{2(l)}$ உடன் பிரதியீட்டுத்தாக்கத்தின் மூலம் செங்கபில நிறத்தை நீக்கும்.
4. $NH_3 / AgNO_3$ உடன் வெள்ளை வீழ்படிவைத் தரும்.
5. இது கேத்திரகணித , ஒளியியல் சமபகுதியங்கள் இரண்டு வகைகளையும் காட்டும்.

34) தூய Cu வளையம் ஒன்றிற்கு Ag முலாமிடப்பட்ட போது 1.08 கிராம் வெள்ளி 193 செக்கன்களில் படிவாக்கப்பட்டது. எனின் இங்கு பயன்படுத்தப்பட்ட மின்னோட்டத்தின் அளவு அம்பியரில்
[ 1C = 96500F]

1. 96  2. 10.  3. 2.5  4. 5  5. 6

35) 25°C இல் வாயு X இனால் நிரப்பப்பட்ட ஒரு விறைப்பான பாத்திரத்தின் அமுக்கம் 10 10⁵ Nm⁻² ஆகும். ஒளிச்சக்தி பாயவிடப்பட்டபோது X பிரிகையடைந்து 25°C இல் பின்வரும் சமநிலையில் காணப்பட்டது. $3X_{(g)} \rightleftharpoons 3Y_{(g)} + 2Z_{(g)}$ . இச்சமநிலையில் X பிரிகையடைந்த நூற்றுவீதம் 45% எனின் தற்போது பாத்திரத்தினுள் அமுக்க அதிகரிப்பு எவ்வளவு? Nm⁻² ல்

1. 13 10⁵  2. 11 10⁵  3. 3 10⁵  4. 1 10⁵
5. 12 10⁵

36) NaOH , $Na_2CO_3$ ஆகியவற்றின் நீர்க்கரைசல் ஒன்றின் NaOH : $Na_2CO_3$ மூல்விகிதம் 1 : 2 ஆகும். மெதைல் செம்மஞ்சள் காட்டியாகப் பாவித்து மேற்படி கரைசலின் 25cm³ ஐ 0.1 mol dm⁻³HCl உடன் நியமித்தபோது முடிவுப்புள்ளி 25cm³ ஆகும். மெதைல் செம்மஞ்சளிற்குப் பதிலாக பினோப்தலீன் காட்டியாக பயன்படுத்தி அதே நியமிப்பை திரும்பவும் செய்தால் முடிவுப்புள்ளி cm³ல்

1. 30  2. 20  3. 15  4. 10  5. 5

37) 
```
                   O    CH2
                   ||   ||
HO – CH2 – CH2 – C – C – CH2 – CH2 – CH3
```
சேர்வையின் IUPAC

1. 4 – propyl – 3 – oxopent – 4 – en – 1 – ol
2. 2 – propyl – 5 – hydroxy – 3 oxo – pent – 1 – ene
3. 4 – propyl – 1 – hydroxypent – 4 – en – 3 – one
4. 2 – propyl – 5 – hydroxypent – 1 – en – 3 – one
5. 2 – propyl – 5 – hydroxypent – 1 – ene – 3 – one

38) பின்வரும் தரவுகளில் பொருத்தமற்றது

1. பென்சீனின் நைத்திரேற்றம் ஓர் eⁿ நாட்ட பிரதியீட்டுத் தாக்கமாகும்.
2. But – 2 – ene உடன் HBr ன் தாக்கம் ஓர் eⁿ நாட்ட கூட்டல் தாக்கமாகும்.
3. அசற்றோனுடன் [ NaCN + ஐ HCl] ன் தாக்கம் ஓர் கருநாட்ட கூட்டல் தாக்கமாகும்.
4. ethanal , Rmgx / $H_2O$ ன் தாக்கம் ஓர் கருநாட்ட கூட்டல் தாக்கமாகும்.
5. பென்சீனில் நடைபெறும் அற்கைல் ஏற்றம் ஓர் கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கமாகும்.

39) $H_2X$ என்ற வன்னமிலம் நீர்க்கரைசல் $H^+_{(aq)}$ , $HX^-_{(aq)}$ என முற்றாக கூட்டற்பிரிகை அடைகின்றது. $Hx^-$ நீரில் பகுதி கூட்டல் பிரிகை அடையும்.வடித்த நீரில் 0.5 mol $H_2X$ கரைக்கப்பட்டு 500cm³ நீர்க்கரைசலாக்கப்பட்டபோது $H^+$ இன் அளவு 0.95mol ஆகக் காணப்பட்டது. கரைசலில் $HX^-_{(aq)}$ ன் செறிவு mol dm⁻³ ல்

1. 0.05  2. 0.1  3. 0.45  4. 0.25

40) $B + A(NO_3)_{2(aq)} \rightarrow A + B(NO_3)_{2(aq)}$
$C + A(NO_3)_{2(aq)} \rightarrow$ இடப்பெயர்ச்சி இல்லை

A , B , C ஆகிய மூன்று உலோக மின்வாய்களின் நியம மின்வாய் அழுத்தப்பெறுமானங்கள் – 1.2V , – 2.4V , +2.2V ஆகும். இவற்றின் சில இணைப்பின் போதான பின்வரும் தரவுகளில் சரியான தெரிவு எது?

| | அனோட்டு | கதோட்டு | eⁿ ஓட்டதிசை | தாழ்த்தல் நிகழும் இடம் | கலத்தின் மி.இ.வி. V இல். |
|---|---|---|---|---|---|
| 1. | B | C | B → C | B | 4.6 |
| 2. | B | C | C → B | C | 4.6 |
| 3. | A | C | A → C | A | 3.4 |
| 4. | B | A | A → B | B | 3.6 |
| 5. | B | C | B → C | C | 4.6 |

***(41)-(50) வரையான வினாக்களிற்கு விடையளிப்பதற்கு a , b , c , d தரவுகளில் பின்வரும் ஒழுங்குமுறை யைக் கடைப்பிடிக்கவும்.***

a , b சரி எனின் விடை (1)
b , c சரி எனின் விடை (2)
c , d சரி எனின் விடை (3)
a , d சரி எனின் விடை (4)
வேறுவகையான விடை எனின் விடை (5)

41) பின்வருவனவற்றுள் அணுத்திணிவு அலகு என்பதின் பெறுமானத்துடன் சரியானது / சரியானவை எது / எவை?

(a) 1.66 10⁻²⁴ g  (b) 1.99 10⁻²³ g
(c) $\frac{10^{-23}}{6.022}$  (d) $1.99 \times 10^{-23} \times 1/12$

42) பின்வருவனவற்றுள் நீரில் கரைந்துள்ள $O_2$ ன் சதவீதம் துணிதலுடன் தொடர்புடைய சமன்பாடுகள் அல்லாதது / அல்லாதவை எது / எவை?

(a) $2Mn(OH)_{2(s)} + O_{2(aq)} \longrightarrow 2MnO_{2(s)} + 2H_2O_{(l)}$
(b) $Mn^{2+}_{(aq)} + 2OH^-_{(aq)} \longrightarrow Mn(OH)_{2(s)}$
(c) $Mn^{2+} + 2H_2O \longrightarrow 2MnO_2 + 4H^+$
(d) $2I^- + S_2O_3^{2-} \longrightarrow I_2 + S_4O_6^{2-}$

43) $Na_2CO_3$ கரைசல் ஒன்று 0.001 mol dm⁻³ செறிவுடையது. இக்கரைசல் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானது / சரியானவை? இக்கரைசலில்

(a) $Na^+_{(aq)}$ இன் செறிவு 46 ppm
(b) $Na_2CO_{3(aq)}$ இன் செறிவு 106 ppm
(c) $Na^+_{(aq)}$ இன் செறிவு 23 ppm
(d) $CO_3^{2-}{}_{(aq)}$ இன் செறிவு 60 ppm

44) அயனாக்கற் சக்தி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது / சரியானவை எது / எவை?

(a) Li ன் $I_3$ < C ன் $I_4$  (b) F ன் $I_3$ < C ன் $I_1$
(c) F ன் $I_3$ < C ன் $I_1$  (d) Na ன் $I_1$ < C ன் $I_1$

45) $Ni^{2+}_{(aq)}$ , $Fe^{2+}_{(aq)}$ என்பவற்றை வேறுபடுத்துவதற்கு எது / எவற்றைப் பயன்படுத்த முடியாது?

(a) $NH_4OH_{(aq)}$  (b) $H^+ / MnO^-_{4(aq)}$  (c) $K_3FeCN_{6(aq)}$  (d) $NH_4CNS_{(aq)}$

46) இலட்சிய வாயுவைப்பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையற்றது / உண்மை அற்றவை?

(a) இவற்றின் மூலக்கூறுகளிற்கிடையே கவர்ச்சிவிசையும் , தள்ளுவிசையும் காணப்படும்.
(b) உயர்வெப்பநிலையிலும் , தாழ்அமுக்கத்திலும் இவை இலட்சிய நடத்தையிலிருந்து விலகுகின்றன.
(c) இவற்றின் Z = 1 ஆகும்.
(d) மூலக்கூறுகளின் மோதுகைகள் மீள்சக்தி உடையவை.

47) பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

(a) பச்சைவீட்டு விளைவிற்கு $CO_2$ , $NO_2$ , $SO_2$ வாயுக்கள் பங்களிக்கின்றன.
(b) (a) ல் குறிப்பிட்ட இந்த வாயுக்கள் அமில மழைக்கு காரணமாகும்.
(c) CFC ஆனது உயர் சக்தியைப் பெற்று $Cl + O_3 \longrightarrow O–Cl + O_2$ எனும் தாக்கத்தின் மூலம் $O_3$ படையை நலிவடையச் செய்கின்றது.
(d) $NO_2^-$ ஆனவை நைத்ரோசோ அமீன் எனப்படும் பதார்த்தத்தை தோற்றுவிப்பதன் மூலம் புற்றுநோய் உருவாகுவதற்கு வழிவகுக்கின்றது.

48) கீழே சில இரும்புத் தாதுக்களும் அவற்றின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. ஆவற்றில் சரியான தரவைக் கொண்டது / கொண்டவை எது / எவை?

(a) $Fe_2O_3$ - மக்னரைற்று
(b) $Fe_3O_4$ - ஏமற்றைற்று
(c) $FeCO_3$ - சிடரைற்று
(d) FeO . $TiO_2$ - இல்மனைற்று

49) பின்வரும் எந்தத் தாக்கங்களில் வெப்பம் உள்ளெடுக்கப்படுவது இல்லை?

(a) $Na_{(s)} \longrightarrow Na_{(g)}$
(b) $Mg_{(g)} \longrightarrow Mg^+_{(g)} + e$
(c) $CH_{4(g)} + 2O_{2(g)} \longrightarrow CO_{2(g)} + 2H_2O_{(g)}$
(d) $Na^+_{(g)} + Cl^-_{(g)} \longrightarrow NaCl_{(s)}$

50) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

(a) பல படிகளைக் கொண்ட இரசாயனத் தாக்கம் ஒன்றில் ஏவற்சக்தி கூடியபடி விரைவான தாக்கத்தைக் கொண்டிருக்கும்.
(b) ஊக்கிகள் தாக்கம் ஒன்றின் விளைவை அதிகரிக்கச் செய்கின்றன.
(c) 25°C ல் $Bi_2S_3$ ன் கரைதிறன் x mol dm⁻³ எனின் இவ்வெப்பநிலையில் இதன் கரைதிறன் பெருக்கம் 108 x⁵ இனால் தரப்படும்.
(d) $2H_2O_2 \longrightarrow 2H_2O + O_2$ இது ஒரு இருவழி விகாரத் தாக்கமாகும்.

(51)- (60) வரை விடையளிப்பதற்கு பின்வரும் ஒழுங்கைக் கடைப்பிடிக்கவும்

| விடைத்தெரிவு | 1ம் கூற்று | 2ம் கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மையாக இருந்து 1ம் கூற்றிற்கு தகுந்த விளக்கம தருவது. |
| (2) | உண்மை | உண்மையாக இருந்து 1ம் கூற்றிற்கு தகுந்த விளக்கம் தராதது. |
| (3) | உண்மை | பொய் |
| (4) | பொய் | உண்மை |
| (5) | பொய் | பொய் |

| | 1ம் கூற்று | 2ம் கூற்று |
|---|---|---|
| 51) | 80°C ல் நடுநிலைக் கரைசல் ஒன்றின் $P^H = 6$ ஆகும். | 80°C ல் நீரின் $K_w$ பெறுமானம் $1 \times 10^{-12}$ mol dm⁻³ ஆகும். |
| 52) | கறுவா இலையில் காணப்படும் சிற்றனெல்லா எண்ணெயை பிரித்தெடுப்பதற்கு கொதிநீராவி காய்ச்சிவடித்தல் பயன்படுத்தப்படுகின்றது. | சிற்றனெல்லா எண்ணெயும் , நீரும் ஒன்றுடன் ஒன்று கலப்பதில்லை. |
| 53) | ஐதரசன் மின்வாயின் மின்வாயழுத்தம் 0 எனக் கொள்ளப்பட்டு மின் இரசாயனத் தொடர் அமைக்கப்பட்டுள்ளது. | மின் இரசாயனத்தொடரில் H ற்கு மேலே உள்ள மின்வாய்கள் தாழ்த்தும் கருவிகளாக தொழிற்படுபவை. |
| 54) | நேர்க்கதிர் துணிக்கைகள் எல்லாம் புரோத்தன்கள் ஆகும். | புரோத்தன்கள் நேரேற்றம் உடையவை. |
| 55) | O – நைத்திரோ பீனோல் , P – நைத்திரோ பீனோல் இரண்டையும் கொதிநிலை அடிப்படையில் வேறுபடுத்த முடியும். | O – நைத்திரோ பீனோலில் மூலக்கூற்று இடையிலான H – பிணைப்பு உள்ளது. |
| 56) | கல்சியம் காபைட்டு நீருடன் தாக்கம் புரியும் போது எதிலீன் ஒரு விளைவாகப் பெறப்படும். இதில் 2-SP² கலப்புடைய காபன்கள் உள்ளன. | 2-SP² கலப்புடைய ஐதரோகாபன்கள் எல்லாம் $CCl_4 / Br_{2(l)}$ ன் செங்கபில நிறத்தை நீக்கக் கூடியவை. |
| 57) | $S_2O_3^{2-}$ அயன் நான்முகி வடிவானது. | இதன் மைய அணுவைச் சுற்றியுள்ள நான்முகி பிணைப்புக் கோணங்கள் ஒவ்வொன்றும் 109° 28 (109.5°) ல் காணப்படும். |
| 58) | ஐதரசன் நிறமாலையில் லைமன் கோடுகளின் சக்தி ஐ விட பாசன் கோடுகளின் சக்தி குறைந்தது. | கருவிலிருந்து வெளிநோக்கி செல்லும் போது சக்தி மட்டங்களின் சக்தி அதிகரித்துச் செல்கின்றது. |
| 59) | $P^H$ ஐ குறிக்கும் சமன்பாடு $P^H = -Log_{10}[H^+_{(aq)}]$ ஆகும். | 25°C ல் $1 \times 10^{-8}$ mol dm⁻³ செறிவுடைய HCl கரைசல் ஒன்றின் $P^H = 8$ ஆகும். |
| 60) | வைரம் , பென்சிற்கரி என்பவற்றின் உருகுநிலைகள் வேறுபட்டவை , ஆனால் கொதிநிலைகள் ஒன்றேயாகும். | வைரத்தில் C-SP³ கலப்பிலும் , பென்சிற்கரியில் C-SP² கலப்பிலும் காணப்படும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org